மகுடம்

# திடுகு வீடு

நீலையூர் சுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் நீலையூர் சுதாகரன் , ஈழமண்
தந்த கவிஞர்கள் வரிசையில்
தன்னையும் இணைத்துக்கொள்கிறார்.
அரிய நயம் பொங்கும் பாடல்களை,
தமக்கே உரிய கிராமிய
சொல்லாடல்களுடன் ,
அரிய சந்தங்களில் அள்ளித் தருகின்றார்.

கவிதைக் கனிகளை
கருத்தாய்ச் சேர்த்து. இனிக்க,
இனிக்கப் பருகத் தருகின்றார்.
நீங்களும் இந்த கவிதைக் கடலுக்குள்
கட்டுமரமாய்ச்சென்று கவிதைத்
துளிகளைச் சுவைப்பீர்கள் என்று
நம்புகிறேன்.

- சுவாமி நீலமாதவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடுகு வீடு

கவிதைத்தொகுப்பு

பைந்தமிழ்ச்சுடர்

சிவபாதசுந்தரம் சுதாகரன்

- நீலையூர் சுதா -

மகுடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடம் பதிப்பக வெளியீடு - 66

ISBN : 978-624-5849-31-4

நூல் : கிடுகு வீடு ● வகை : கவிதைத்தொகுப்பு ● ஆசிரியர் : நீலையூர் சுதா ● உரிமை: திருமதி P.M.L.சுதாகரன் ● முதல் பதிப்பு : ஐப்பசி - 2022 ● பக்கங்கள் - 160 ● வெளியீடு : மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு : அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ● விலை : 750/=

Book - Kiduku Veedu ● Author - Neelaiyoor Sutha ● © Mrs.P.M.L. Suthakaran ● First Edition - October -2022 ● Size - 1/8 ● Pages - 160 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Book & Cover Design T. Shankar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 750/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 66வது வெளியீடாக கவிஞர் நீலையூர் சுதாவின் கிடுகுவீடு என்ற கவிதைநூலை வெளியிடுவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

நீலையூர் சுதா என்ற புனைப்பெயரில் எழுதிவரும் பெரிய நீலாவணையைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் சுதாகரன் குண்டகசாலை விவசாய கல்லூரியில் விவசாய டிப்ளோமாவும், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்துறையில் பட்டமும் பெற்றவராவார். தனது பட்டப் பின்படிப்பாக பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் டிப்ளோமாவும் முடித்துள்ளார். தற்போது கிழக்கு மாகாண மீன்பிடித்துறை பணிப்பாளராகப் பணிபுரியும் இவரது முதலாவது கவிதை நூலும் வெளிவரும் நான்காவது நூலும் இதுவாகும்.

தனது தொழில்துறை சார்ந்து இவர் ஏற்கனவே மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார் அவை முறையே

1. மீன்வளர்ப்பு
2. கூண்டு மீன் வளர்ப்பு
3. பருவகால குளங்களில் மீன்பிடி முகாமைத்துவம் என்பனவாகும்.

தனது பாடசாலைக்காலங்களில் இருந்தே கவிதை, சிறுகதை, பாடல்கள் என எழுதிவரும் கவிஞர் நீலையூர் சுதா தமிழகத்தில் ஒருவருட யாப்பிலக்கணப் பயிற்சியை மரபுமாமணி வரதராசாசிடம் பயின்று முதற் தடவையிலேயே பைந்தமிழ்ச்சுடரென்ற பட்டத்தைப் பெற்றவர் ஈழத்தின் நவீன கவிஞர்களில் ஒருவரான நீலாவணன் அவர்களின் உறவினரான இவர் தனது ஊரான பெரிய நீலாவணை பேச்சி அம்மன் மீது பாடிய பாடல்கள் ஒலிவடிவில் இறுவட்டாகவும் வெளிவந்துள்ளது.

அதிகமாக தனது கவிதைகளை முகநூலிலேயே பதிவேற்றிவரும் கவிஞரின் கிடுகுவீடு என்ற தொகுப்பு தமிழ் கவிதை உலகிற்கு ஒரு புதிய முயற்சி. தனது மண்சார்ந்த, கலை பண்பாடு சார்ந்த சகல விடயங் களையும் கவிதைகளாக இயற்றியுள்ளார் கவிஞர். கிராமிய சூழலில் இயல்பான தென்றலைப் போல் கவிஞரின் கவிதைகள் மனதை வருடுகின்றன.

மண்சார்ந்த கவிதைகள் என்ற வகையில் இக்கவிதைத் தொகுதியின் முக்கியம் உணரப்படும்.

வாழ்த்துகளுடன்

**- மகுடம் வி. மைக்கல் கொலின்**

(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கவின் மிகு எழிலார்ந்த, மட்டுநகர் வாவிக்கரை... கவிஞர்களின் அணிதிகழும் கிழக்குக் கடற்கரைச்சாலை... சற்று ஓய்வெடுக்கும் மீன்பிடிப் படகுகளின் அணிவகுப்பு... இஃதென்ன!! கவிஞரைப் பாராட்டு கையில் படகுகளுக்கு அங்கென்ன வேலை? என்று கேள்வி எழலாம். நமது கவிஞருக்கும் அதற்கும் ஒரு தொடர்புண்டு.

கவிஞர் நீலையூர் சுதாகரன், ஈழமண் தந்த கவிஞர்கள் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொள்கிறார். அரிய நயம் பொங்கும் பாடல்களை, தமக்கே உரிய கிராமிய சொல்லாடல்களுடன், அரிய சந்தங்களில் அள்ளித் தருகின்றார். 'வலியினை வலிந்து சுமக்கும்' தாயைப் பேசுகின்றார்.' நெஞ்சிலே நேசத்தோடும் தவங்கிடப்போம்' என்று பரவசமாகிறார். கிடுகு வீட்டுக் கவிதையில் 'கூரைக்குப் போனால் வேலையும் முடியும் கூனிச்சம்பல் கிழங்கோடு இருக்கும்' என்று பழமையில் நம்மை ரசிக்க வைக்கிறார். நாட்டு முட்டை வாங்கப் போய் கூழ்முட்டையாய் போன கதை கூறி நம்மை நகைக்க வைக்கிறார். 'அழியாக் கவிதை' எழுதி 'கருத்துக் கூற நீங்கள் மறுத்துவிட வேண்டாம்' என கருத்து பேசுகின்றார். 'கவிதைக்கு கண்ணுண்டு' என்பதால் நம்மை விழித்துப் பார்க்க வைக்கிறார். 'கல்யாணக் கதையிலே' நம்மூர் பாரம்பரிய வழக்கமெல்லாம் பகர்ந்து போகிறார். 'பழைய ரேடியோவில்' 'பாட்டுக் கேட்டு', 'முடிந்த கவிதையில்' தன் மனப் புழுக்கத்தை திறந்து கவிழ்த்திருக்கிறார். கவிஞருக்கு வரும் பிரச்சினைகள் கடினமானவைதான் போலும்.

'தயிரும்' 'பலாப்பழமும்' தரமாய் உண்டு, 'மண்வாசனை'பேசி சிறுசிறு நிகழ்வுகளையும் தரவாய்த் தொடுத்திருக்கிறார். 'கடற்கரையில் சோறுண்டு','கரவலை' இழுக்கிறார். இவ்வாறு கவிஞர் தொடாத இயற்கையும், அழகும், வனப்பும் ஏதுமில்லையோ என்று தோன்றுகிறது.

மறைபொருளாம் இறைவனை மகிழ்ந்து பேசி, பெண்ணியத்தைத் தொட்டு, மட்டு நகரை நேசித்து, கடலையும் கடல்சார்ந்த பொருட்களையும் நயம்படப் பேசி, தான் மீன்பிடித்துறையில் பெரும் பதவியில் இருந்தாலும் மக்களின் நலம் தேடிப் பணிபுரியும் தோழன் என்பதை நம் மனதிற்குள் பதிவிக்கிறார்.

காலத்தால் செய்த கவிதைச் சுவடுகள். ஆழமான வரிகள், அழகான நயங்கள். பலமுறை வானொலியில் 'நண்பன் நீலையூர் சுதா' வடித்தது... என நெறியாளர் நெகிழ்ச்சியுடன் அறிவித்ததைக் கேட்டு இன்புற்றிருக்கிறோம்.

கவிதைக் கனிகளை கருத்தாய்ச் சேர்த்து, இனிக்க, இனிக்கப் பருகத் தருகின்றார். நீங்களும் இந்த கவிதைக் கடலுக்குள் கட்டுமரமாய்ச் சென்று கவிதைத் துளிகளைச் சுவைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நமது அன்பர் திரு. நீலையூர் சுதாகரன் அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த பாராட்டுகளும், ஆசிகளும் உரித்தாகுக.

இறைபணியில்

**- சுவாமி நீலமாதவானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசக் கவிதைத் தொகுப்புகளின் வரிசையில்....

பிரதேச அடிப்படையிலே ஈழத்து தமிழ் நவீன இலக்கியங்களை அணுகுகின்ற போது 'நாவல்கள்' 'சிறுகதைகள்' என்பனவே கவனிக்கப் படுவது வழக்கமாகவுள்ளது. 'கவிதைகள்' கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. 'பிரதேசக் கவிதைகள்' என்ற அடிப்படையில் தொகுப்புகள் வெளிவராமையே இதற்கான காரணமாகும். இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில் மண்டூர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு அக்கினி நாள்கள்(மண்டூர் தேசிகன்) தொகுப்பும் ஒலுவில் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு 'வெயில் நடுவே ஒரு வீரப்பழம்' (வஹாப்தீன்) தொகுப்பும் ஏலவே வெளிவந்திருப்பது இவ்வேளை நினைவிற்கு வருகின்றது. இவ் வரிசையில் 'கிடுகு வீடு' என்ற இத் தொகுப்பினூடாக நீலையூர் சுதாவும் இப்போது இணைந்து கொள்கிறார்!. முன்னிரு தொகுப்புகளுடன் ஒப்பிட்டு இத்தொகுப்பின் சிறப்புக்கள் சிலவற்றை எடுத்துக் காட்டுவது பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

'அக்கினி நாள்கள்' மண்டூர் பிரதேசத்தின் இயற்கை அழகு வியாபித்திருக்க அப் பிரதேச மக்களது வாழ்வியல், சமூகப் பிரச்சனைகள் பற்றி விரிவாக பேச முற்படுகின்றது; பண்பாட்டுப் பின்னணி அரிதாகவே இடம் பெறுகின்றது.

'வெயில் நடுவே ஒரு வீரப்பழம்' ஒலுவில் பிரதேச மக்களது வாழ்வியல் பற்றிச் சுருக்கமாகவும், சமூகப் பிரச்சனைகள் பற்றி விரிவாகவும் அலசுகின்றது.

மாறாக, இத்தொகுப்பு, இன்னொரு தடத்தில் செல்கின்றது ஆங்காங்கே, கவிதைகள் தொடர்பான பொது இயல்புகள் சிலவற்றை வெளிப்படுத்துவதுடன் தனது கவிதைகள் தொடர்பான தனது விமர்சனக் குறிப்புகளை வெளிப்படுத்துவதும் வாசகருக்கு மேலதிக விருந்தாகின்றது.

கிழக்கிலங்கை நவீன கவிதை முன்னோடியும் பெரிய நீலாவணை யைச் சேர்ந்தவருமான கவிஞர் நீலாவணனுக்கும் ஒருவிதத்தில் பெருமை சேர்ப்பதாக இத் தொகுப்பின் வரவு காணப்படுகின்றது.

ஆயினும் கவிதை வெளிப்பாட்டு முறையை பொறுத்த வரையில் நீலாவணனது மரபுக் கவிதை வடிவங்களின் செழுமையை புதுக்கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமாக வெளியிடப்பட்டுள்ள இத் தொகுப்பில் எதிர்பார்க்க முடியா துள்ளது. கவிதைகளின் இயல்பான ஓட்டமும் ஒரு சில இடங்களில் தடைப்படுகின்றது. தனது கவிதைகள் பற்றி தானே விமர்சிக்கின்ற இக் கவிஞர் எதிர்வரும் தொகுப்புகளில் அவற்றிலும் கவனஞ் செலுத்துவாராக!

இவ்விதத்தில் இக் கவிஞர் தமது பிரதேசமான பெரிய நீலாவ ணையை மதிப்பது பற்றி முதலிற் குறிப்பிட்டாக வேண்டும். ஏனெனில் முதற் கவிதை ஊர் பற்றிப் பேச அடுத்த கவிதையே தாய் பற்றியதாக அமைந்துள்ளது.

பிரதேசத்தின் முதல் அறிமுகம் 'வீடு' பற்றியதாக - அங்குள்ள 'கிடுகுவீடு' பற்றியதாக இடம்பெற்றுள்ளது. கிடுகு வீடாயினும் நன்கு திட்டமிட்டு உறவினர்கள் சேர்ந்து ஒழுங்கான முறையில் கட்டப்படுவது நுட்பமான முறையில் படம் பிடிக்கப்படுகின்றது.

பிரதேசத்திலுள்ள கடையும் அங்கு விற்கப்படும் நாட்டு முட்டை யின் மகத்துவமும் அடுத்த கவிதையில் பேசப்படுகின்றது.

கடற்கரைத் தெருநாயும், உயிரிழந்த பனங்கொட்டையும் அடுத்து அறிமுகமாகின்றது. சித்திரைத்தொதல், தயிர், பாலப்பம், எச்சிலூறும் வண்ணம் விவரிக்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் நோக்கும் போது மட்டக்களப்பு பிரதேச பண்பாட்டுக் கோலங்களை அழகான முறையில் தீட்டும், ஆவணப்படுத்தும் முன்னோடித் தொகுப்பு இதுவென்றுரைப்பதில் தவறில்லை!

அனைத்து விடயங்களும் கவிஞரது அனுபவக் கலப்புடன் - அனுபவக்களிப்புடன் - வெளிப்படுவதும் அது வாசகரை பற்றிக் கொள்வதும் இத்தொகுப்பின் இன்னொரு சிறப்பம்சமாகின்றது! இவ்விதத்தில் பண்பாட்டுப் பதிவுசார் முதற்தொகுப்பாகிறது!

இவையாவும் கவிஞரது அனுபவக் கலப்புடன் வெளிவருவதும் வாசகனை அது தொற்றிக் கொள்வதும் நிகழ்கிறது. இவ்வகையில் முன்னிரு தொகுப்புகளிலிருந்தும் இத்தொகுப்பு வேறு திசை நோக்கிப் பயணிப்பது புலப்படுகின்றது.

வாழ்த்துகளுடன்

**பேராசிரியர் செ.யோகராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இலங்கையின் கிழக்கு மாகாண மீன்பிடித்துறைப் பணிப்பாளரான திரு. சிவபாதசுந்தரம் சுதாகரன் அவர்கள் "நீலையூர் சுதா" எனும் பெயரில் படைக்கும் முகநூற்கவிதைகளைப் பார்த்து என்னைவிடப் பிரமிப்போர் இன்னும் பலர் இருக்கலாம். காரணம், நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை, மறந்த வாழ்க்கையைக் குதூகலிக்கத்தக்க மொழிநடையில் அவர் திடீரெனக் கவிதைக்குள் ஏற்றிவைப்பது வியந்து வரவேற்க வைக்கிறது.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூக்கவிதை வரிசையில் இவரது கவிதைகள் "கிராமியக்கவிதை" என எழுந்து புதிய தடத்தைப் பதிக்கிறது. மட்டக்களப்பிலிருந்து ஒரு நவீன கிராமியக் கவிஞர் தோற்றம் பெற்றதை உலகத் தமிழர்களாகிய நாங்கள் மகிழ்ந்து வரவேற்கின்றோம். இலங்கையின் புதிய இலக்கிய இயங்கியலில் "நீலையூர்சுதா" கிராமியக் கவிஞருள் முன்னவர் என்று கொண்டாடத்தக்க பண்புடன் முகிழ்ந்து மணம் பரப்புகின்றார்.

அவர்தம் கவிதைகளைக் காண Suthaharan Sivapathasundaram எனும் முகநூலைக் காணலாம். ஆனால் இன்று அவை அனைத்தும் ஒருங்கே ஒரு கவிநூலாகத் தோற்றம் பெறுவது பலரும் படிப்பதற்கு வாய்ப்பாக அமைகிறது.

ஒரு கிராமியச் சூழலிலிருந்து பல்கலைக்கழகம் வரை சென்று கற்றறிந்த தனது அறிவுப் புலமையையும் வாழ்ந்த வாழ்வின் பதிவுகளையும் ஒன்று திரட்டிக் கவியாக இவர் படைக்கும் ஒவ்வொரு கவிதைக்குள்ளும் நாங்கள் நீராடி வரலாம். கவிதை அனுபவம் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை இது என்று வாழ்ந்தவர்களுக்கும் இப்படியா இருந்தது என்று வாழாதவர் களுக்குப் பாடமாகவும் உணர்த்தும் அற்புதத்தைத் தனது படைப்புகளுக்குள் நிகழ்த்துகிறார். "ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பார்கள். ஆனால் இவரின் கவிதைகளோ ஒரு மரத்தின் இனிய கனிகளைப் போல் அத்தனையும் அருஞ்சுவையுடன் படைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கவிதை நூலை வாங்கிப் படியுங்கள். இவரின் கவிதை களுக்குள் வாழ்ந்து பாருங்கள். மொழி புதிய வடிவத்தில் தன்னைத் தாலாட்டிக் கொண்டே வருகிறது என்பதை உணர்வீர்கள். எனது கனிந்த வாழ்த்துகளுடன்

**- கல்லாறு சதீஷ்**

Dr. (H.C) Nageshwaran Arulrasa D.Litt, Switzerland



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

"நீலையூர் சுதாவாகக் கிராமிய மணங்கமழும் இனிய கவிதைகளால் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் பெரியநீலாவணையைச் சேர்ந்த திரு.சிவபாதசுந்தரம் சுதாகரன் அவர்கள் எனது நண்பன் என்பதையிட்டுப் பெருமிதம் அடைகின்றேன்.

விவசாயத் திணைக்களத்தில் உயர் பதவியிற் தன் திறமையை நிரூபித்துப் பின்னர் மீன்வளத்துறையிற் கிழக்கு மாகாணப் பணிப்பாளரெனும் உயர்ந்த நிர்வாக அதிகாரியான இவர் நிலையுயரும் போதும் பணிவு கொள்ளும் இனிய பண்பாளர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" எனும் பொய்யாமொழிக்கிணங்க உயர்பதவியிற் புகழோடு தோன்றும் அன்பு நண்பன் சுதாகரன் கவியுலகிலும் "கிடுகுவீடு" எனும் கவிதை நூலோடு புகழுடன் தோன்றுவது பாராட்டுக்குரியதாகும்.

மனிதநேயமும் ஆன்மீக நாட்டமுங் கொண்ட இவர் மரபுக் கவிதையின் மீது கொண்ட ஈடுபாட்டாற் பைந்தமிழ்ச்சோலையில் மரபுமாமணி மா.வரதராசன் அவர்களிடம் பயிற்சி பெற்றுப் "பைந்தமிழ்ச்சுடர்" எனும் உயரிய பட்டத்தைப் பெற்றதுடன் தனது கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் பேச்சியம்மன் மீது இசைப் பாடல் வெளியிட்டமையும் அவரது கவிப்புலமைக்குச் சான்றாம்.

இலங்கையின் தலைசிறந்த மூத்த கவிஞர்களுள் ஒருவரான நீலாவணன் அவர்களைப்போல் நீலையூரானும் கவியுலகில் மென் மேலும் சாதனை புரிய பேச்சியம்மனை மனமுருக வேண்டித் தனது இனிய மனையாள் லலித்தாவுடனும் தன்னைப்போலவே கல்விகலைகளிற் சிறப்புறும் மகன்மார் புருஷோத்மன், மதுசூதனன், பத்மகேஷன் ஆகியோருடனும் சுற்றஞ்சூழ வாழ்வாங்கு நீடூழிவாழ உளப்பூர்வமாக வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

தமிழன்புடன்
வண்ணப்பாவரசர், பைந்தமிழ்ச் செம்மல்
ஆசிகவி.வைத்திய கலாநிதி.
**- செல்லையா வாமதேவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"முதற்கண் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவன் எனக்கருளிய வல்லமைக்கு நன்றி கூறி என்னுரையைத் தொடர்கின்றேன்.

எனது கன்னி முயற்சியாக "கிடுகு வீடு" என்னும் தலைப்பில் எனது கவிதைகள் ஒரு கவிதைத் தொகுப்பாக வெளிவருவதில் நான் பேருவகை அடைகின்றேன். எமது கிராமிய பாரம்பரியங்கள், வழமைகள், விழுமியங்கள், வழக்காறுகள்,கலாசாரங்கள் படிப்படியாக மருவி இல்லாதொழிந்து போகும் அவல நிலை கண்டு விசனமடைந்த என்னுள்ளம், நானறிந்த, நுகர்ந்த எனது மண்வாசனையை அதன் கீர்த்தியை நீங்களும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டதன் விளைவே இக் கவிதைத் தொகுப்பு.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கமைய கிராமப்புறங்களில் கையாளப்படும் சொற்பதங்களை நகைச்சுவை யோடும் பொருட்சுவை சேர்த்தும் ஞாபகப்படுத்த முயற்சி செய்துள்ளேன். அதில் வெற்றி பெற்றுள்ளேனா என்பதை நீங்கள் தான் கூற வேண்டும். கவிதையில் புதுக்கவிதை, மரபுக் கவிதை, ஹைக்கூ கவிதை என இன்னோரன்ன பல கட்டமைப்புகள் உள்ளன. இவை எவற்றுள்ளும் என்னைக் கட்டிப்போடாது, என் சிந்தனையில் பட்ட பல வர்ணங் களுக்கு தூரிகை கொண்டு உருக்கொடுக்க முனைந்துள்ளேன். கிராமிய சொல்லாடல்கள் வழக்கொழிந்து புதிய தலைமுறையினருக்கு அது புலப்படாமல் போகும் காலத்தின் நிலை கண்டு கவலை மிகக் கொண்டு அதைக் களைய சிறு முயற்சி மேற்கொண்டுள்ளேன். நீங்கள் ஆதரவு தரும் பட்சத்தில் எனது முயற்சி தொடரும். எனது சில கவிதைகள், கவிதைகள் தானா? அல்லது கவிதை என்ற எண்ணக்கருவிற்குள் அடங்குகின்றதா? என்பது எனக்கே புரியாத புதிர். இருந்தும் எனது படைப்புக்களை துணிவோடும் பணிவோடும் உங்கள் முன் சமர்ப்பித்துள்ளேன்.

எனது கவிதைத் தொகுப்பில் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பட்ட அவலங்கள், பிரச்சினைகள், ஏழ்மை, வர்க்க வேறு பாடுகள், கிராமத்திற்கேயுரிய சிறப்பம்சங்கள் என அனைத்து விடயங்களையும் தொட்டதாகக் கவிதைகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் நாடினால் இக்கவிதைகளை மேலும் சிறப்பாக்கி எனது இரண்டாவது படைப்பாக வெளிக்கொணர எண்ணியுள்ளேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய இக்கவிதைகளைக் கட்டாயம் ஒரு தொகுப்பாக வெளிக்கொணர வேண்டுமென்பதில் என்னைவிட அதிக ஆர்வம் கொண்ட அன்பு உள்ளங்களை இவ்விடத்தில் நான் நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

அந்த வகையில் எனது இத்தொகுப்பிற்கு ஆசியுரை வழங்கிய சுவாமி. நீலமாதவானந்தஜீ மஹராஜ் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய பேராசிரியர்.செ.யோகராஜா அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய டாக்டர்.அ.நாகேஸ்வரன், கலைமாறன் கவிஞர்.செ.லோக ராஜா, ஆசுகவி.வைத்தியகலாநிதி. செல்லையா வாமதேவன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் தனது நிதியின் ஒரு பகுதியை வழங்கி இத்தொகுப் பினை நூலாக்குவதற்கு உதவிய நண்பர்கள் டாக்டர்.அ.நாகேஸ்வரன் (கல்லாறு சதீஷ்) மற்றும் பாடகர்.இ.நகுலேஸ்வரன் (அவுஸ்திரேலியா) அவர்களுக்கும் பதிப்பு செய்வதற்கு உதவிய பதிப்பாசிரியர் திரு. மகுடம் வி. மைக்கல் கொலின் அவர்களுக்கும் மற்றும் வணசிங்கா அச்சகத்தாருக்கும், இக்கவிதைகளைப் பொருத்தமாக வடிவமைப்பதில் சொற் பிழை, பொருட்பிழை திருத்தி கணினியில் தட்டச்சு செய்துதவிய எனது மனைவி திருமதி. ல.சுதாகரன் மற்றும் திருமதி. தி. சர்மிலக்ஷனா அவர்களுக்கும் பல்வேறுபட்ட வகைகளிலும் தமது ஒத்துழைப் புகளை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு பறவை பறப்பதற்கு அதன் இரு சிறகுகளும் செம்மையாக இருக்க வேண்டும். அவ்வாறே ஒரு மொழி வளர்வதற்கு கலைகளும் பண்பாடுகளும் துணைபுரிய வேண்டும். அவ்வகையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு யானும் ஒரு சிறு பணியாற்றியுள்ளேன் என்பதையிட்டு மட்டற்ற களிப்படைகின்றேன்.

வாழ்க தமிழ் ! வளர்க அதன் சிறப்பு வானுயர்ந்து !!

நன்றி

**சி.சுதாகரன்,**
(நீலையூர் சுதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்



எனது "கிடுகுவீடு" எனும் இக்கவிதை நூலை
எனது அன்பிற்கும் பாசத்திற்கும் இருப்பிடமான
அன்புத் தந்தை அமரர்
ஆறுமுகம் சிவபாதசுந்தரம் அவர்களுக்கு
சமர்ப்பணம் செய்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனதூர் (நீலையூர்)

கிழக்கினில் கிளம்பிய
ஒளிக்கதிர் முதலிலே
அகற்றிட இருளினை
அகப்படும் இடமது.

கரைதொடு கடலுடன்
கரிநிற சுரிநிறை
குளமிடை நடுவினில்
குடிபல வசிப்பது.

பெரிதொரு தரையுடை
பெருமையால் குறைவிலா
பலஇனம் வசித்திடும்
பரம்பரை இடமது.

வளம்மிகு நிறைந்ததால்
வளர்பயிர் வளர்த்திடும்
வழிமுறை அறிந்தவர்
வளர்கிற இடமது.

உணவினைப் பெருக்கியே
உளமது மகிழ்ந்திடும்
உழவரின் உழைப்பினால்
உயர்ந்திடும் நிலமது.

கடலிலும் கரையிலும்
கயிறுகள் வலையென
புதுமுறைப் பொறிகளைப்
புகுத்துவோர் இருப்பிடம்.

பழையவை கழிந்திடா
பழமையை வளர்த்திட
இளசுகள் துடித்திடும்
இயற்கையின் இடமது
அரசினில் பணிபுரி
அலுவலர் பலருடன்
தொழில்முறை உழைப்பினால்
தொகையினர் வெளியிலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என்தாய்

உயிரணுவைக் கருவறையில் உரமூட்டி
உருக்கொடுத்து மறைவினிலே வளர்க்கவதை
ஒருக்கணையாய்ப் படுத்தும் ஓங்காளமெடுத்தும்
கருக்கலையா கவனிப்பில் காத்திருப்பாளென்னன்னை

வருத்தமுடன் வலியினை வலிந்துசுமந்தும்
மருத்துவரைப் பார்க்கவென மணிக்கணக்காயலைந்தும்
உருக்கமுடன் உருகியவள் உருத்திரனைவேண்டி
உருக்கொடுத்து வளர்த்தாளே என்னன்னை

உதிரத்தை உணவாக எனக்களித்தும்
உள்மூச்சு தடையாயின் உறிஞ்சிழுத்தும்
ஒவ்வாததெதையும் ஒதுக்கி வைத்தும்
அவ்வாறுண்ணாது ஆசை நீத்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தடித்தால் காத்தணவெனக் கதவை மூடி
கதவுக்குக் குறுக்காகக் கத்தியைப் போட்டுப்
பார்த்திருந்து பக்கத்தில் பாலூட்டியென்னை
படுத்திருப்பாள் நனைந்தங்கு மூத்திரத்தில்

விறகுபோல தானெரிந்து வென்றெடுத்த
நினைவையெல்லாம் வீணைபோல தான்மீட்டி
தனிமையாக அவளிருந்து தன்பாட்டில்
அடைவாளே ஆனந்தம் அவள்பாட்டில்

தாலாட்டுப்பாடி என் தலையைப்பிடித்து
தங்கமகனென்று என்னை நித்திரையாக்கி
சோறாக்கிக் கறியாக்கி சோர்வின்றி
பாடாகிப் பாடுபட்டாள் என்னன்னை

பொட்டுவைத்துப் போத்தலில் பாலும் வைத்து
தட்டுப்படக் கூடாதென்று தலையணையும் வைத்து
ஒட்டிநின்று பார்த்து உள்ளம் மகிழ்ந்து
கட்டிப்பிடித்துக் கொஞ்சியென்னைக் களிப்புறுவாள்

நோய்வந்தால் பூவாய்ந்து கோவில் சென்று
நோன்பிருந்து எனக்காக நொந்து வேண்டி
காப்பெடுத்துக் காப்பறுத்துக் கடவுளோடு
கழித்திருந்தாள் என்னன்னை எனைக்காக்க

மாரோடு அணைத்த காலந் தொட்டு
மண்ணோடு போகும்வரை மகிழ்ந்தாளே பார்த்து
நோகாமல் எனைவளர்த்து ஆளாக்கி விட்டாள்
தீராதே எனதுகடன் எப்பிறப்பெடுத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடுகு வீடு

தாழையிலே நாரெடுத்து
வேளைக்கே காயவைத்து
கூரையில் வேய்வதற்குக்
கூடிடுவார் கூட்டமொன்று

கார்த்திகை வந்தாலே
காசோடி விளையாடும்
கட்டுக்கிடுகு வாங்க
கட்டொன்று தேவைப்படும்

கட்டுற அன்றைக்கு
ஓலைபிரித்து ஒட்டறையடித்து
தூசுதட்டித் துப்புரவாக்கிக்
கூட்டிப்பெருக்கிக் குப்பைமடுவிலிட்டு
பார்த்துக்கிடப்போம் பாண்தான்சாப்பாடு

ஓலைக்கட்டைப் பிரித்து
ஒவ்வொன்றாய் அதையெடுத்து
காயப்போட்டு வெயிலில்
கட்டத் தொடங்கிடுவோம்

தொத்துமட்டைவேறு இத்தமட்டைவேறு
சேர்த்து இவற்றையெல்லாம் வேலிகட்ட
சாத்துமட்டையாக மாற்றியதை வைப்போம்

கட்டுறகிடுகு பிரித்திருக்கும்
கடகடவென்று கூரையிலேறி
கைமரமொன்றில் தாவியிருப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ,
தேத்தண்ணியொன்று அம்மா தருவார்
அது
தேனாயொழுகும் வாயாலெமக்கு

அப்பா,
மட்டைகள் விடுவார் ரொக்கட் மாதிரி
கட்டிற ஆளதை எட்டிப் பிடிக்கணும்
அப்பாவை நினைத்தால்
அதெல்லாம் எனக்கு
இப்பவும் ஞாபகம்

மூத்தப்பா கீழே முறையாகப்பார்க்க
முகாமைக்கம்புடன் முழுமூச்சாய் நிற்பார்
நெத்திமூலையில் முறித்துக் கட்டணும்
தொத்துமட்டைக்கு சேர்த்தும் விடணும்

கூரைக்குப்போனால் வேலையும் முடியும்
கூனிச்சம்பல் கிழங்கோடு இருக்கும்
எலியோடியெல்லாம் ஏராளம் இருக்கும்
எடுத்ததையங்கு மோட்டுக்கு எறிவார்
ஓட்டைதெரியாமல் கூட்டிக்கட்டி
முடித்ததும் கீழே குதித்துப் பாய்வோம்

தளிர்களையெல்லாம் தடியொன்றுவைத்து
தலைவாசற்பக்கம் அறுத்துக் குமிப்போம்
கட்டினபிறகு கல்யாணவீடுதான்
கட்டின களைப்புக்கு வட்டியும் முதலும் தான்

இரவுக்கு சாப்பாடு இதமாகவங்கு
இரவிலும் உறவினர் முற்றத்திலங்கு
பெரும்பாலும் அங்கு போத்தலுமிருக்கும்
பொழுது போக இவைகள் தொடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாட்டு முட்டை

ஊருக்குச்சென்று ஊராரைப்பார்த்து
உண்டுகழித்து உறவாடி
சென்றுநின்றேன் திருமலைசெல்ல

போராடியேறிப் போக்குவரத்தில்
வாகரையில் இறங்கியிருந்தேன்
வருடக்கணக்காய் அங்குநான்
வேலை செய்தேன்
வாகரையென்றாலது
யாவருக்குந்தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமோ இரண்டுங்கெட்டது
ஓலைக்கடை அது
வளவுமூலையில்தான் இருக்கு
சோலைக்காடு வளவு
யாருமில்லை கடையில்
நானும் நின்று பார்த்தேன்
சத்தமொன்று பின்னால்
என்ன வந்ததென்று?
என்னை நோக்கிக்கேட்டாள்

சேலையோடந்த மனிசி
சிரிப்புக்கொஞ்சம் கொடுப்பில்
சேர்ந்து வந்தாளொருத்தி

கதையைக்கொஞ்சங் கொடுத்தேன்
கண்டுபிடித்தேன் தொழிலை
இரண்டுபேருஞ் சேர்ந்து
ஒன்றும்விடாமல் அங்கு
ரீவிபார்ப்பதே தொழில்
பேருக்குத்தானது கடை
ஊருக்கெல்லாம் தெரியும்

என்ன கடிக்கயிருக்கு
என்று நானுங்கேட்க
சொன்ன பதில்
கொரோனாக்குப்பிறகு
கொண்டுவாறானில்லை

எங்கடவீட்டுக் கோழிபோட்ட
நாட்டுமுட்டை இருக்கு
விருப்பமென்றால் எடுங்களதை
எனக்குச் சொன்னாள் கடைக்காரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு முட்டை என்றால்
வீட்டில் நல்ல விருப்பம்
சிவத்த ஓட்டைப் பார்த்துத்
தெரிந்து பத்தை எடுத்தேன்

ஓட்டைப் பார்த்தபோது
உள்ளுக்குள்ளே பயம்தான்
கோட்டைவிட்டு விட்டால்?
வீட்டிலிருக்க முடியுமா?

கொண்டுபோய் அதனை
அன்றே அவிக்கச்சொன்னேன்
இரண்டு போடவேணும்போல
இருந்ததன்று எனக்கு

கொஞ்சநேரங் கழிய
கூவியொருகுரல் குசினிக்க
எங்கவாங்கின இந்தக்கூழ்முட்டையை?
என்றாள் மனைவி

அஞ்சுங்கெட்டு அறிவுங்கெட்டு
அரைமணிநேரம் எனக்கு
பதிலே வரவில்லை

வெள்ளையுமில்லை
மஞ்சளுமில்லை
எல்லாமே கூழ்தான்
என்றவள் சொன்னதில்
உண்மையும் உண்டு
நன்றாகப் பார்த்தால்
ஒன்று விளங்குது
என்ன அது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழியாத கவிதை

கவிதையெல்லாம் எழுதி
மெசினில் போட்டுவைத்தேன்
காலங் காலமாகக்
காத்து அதைப்பார்த்தேன்

சேர்த்து வைத்ததெல்லாம்
செல்லுபடியாக்க
சேர்ந்து சிலரிப்போ
செவ்வை பார்க்கின்றோமே

மெசினைத் திருத்தச்சொன்னேன்
எல்லாமழிக்கக் கேட்டான்
களத்திக்கொஞ்சம் தந்தான்
எடுத்துவைத்து இருக்கன்

பொருத்தமான சிலதைப்
போட்டுக்கொண்டே இருப்பேன்
வருத்தமான சிலதும்
வந்துகொண்டே இருக்கும்

கருத்துக்கூற நீங்கள்
மறுத்துக்கொள்ள வேண்டாம்
கருத்தைத்தானே நானும்
கண்ணுறுத்திப் பார்ப்பேன்

திருத்திக்கொள்ள அதுவும்
ஒரு பொருத்தமான செயலே
திருத்திவிட்டால் எல்லாம்
அடுத்துவரும் என் புத்தகமே

விரித்துப் பார்க்கவதனை
விபரந்தெரியும் வரிகள்
மறந்துபோன எங்கள்
மண்கள் சொல்லுங்கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிக்குக் கண்ணுண்டு

உன் கவிதை எனக்கு
ஒரு விடயம் சொல்ல வேண்டும்
விடயம் சொல்வதாயின்
சில தடயம் உனக்கு வேண்டும்
தடயம் தேட உனக்கு
பல தகவல் தேட வேண்டும்
தகவல் தேட உனக்கு
பல தடவை போக வேண்டும்
பல தடவை போக உனக்கு
மிக நேரம் நன்கு வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரை நம்பி கவிதை எழுத?
கவிதை சொல்ல வரிகள் என்ன?
வரிகளிலே வலிமை என்ன?
வலிமைக்கு நம் திறமை என்ன?
திறமைக்கு நம் அறிவு என்ன?

நல்ல கவிதையெழுத தமிழில்
தள்ளி நின்றால் முடியா
அள்ளி அதனை எடுத்து
அதில் முழுக வேண்டும்

பெண்ணைக் காணத் தோணும்
எண்ணம் உனக்கு எழணும்
பெண்ணில் காணும் நயத்தை
கவியில் எடுத்து விடணும்
அப்போ
உன்னைக் காணத் துடிப்பர்

கவிதைக்கும் கண்ணுண்டு
மூக்குண்டு வாயுண்டு
அதைக் கண்டுபிடி நீ
எழுதமுன்பு
விருப்புண்டு கருத்துண்டு
என்று இருந்துவிட்டால்
ரசித்து ருசிப்பது என்றால் எங்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்கரைத்தெருநாய்

தெருவோரம் வயிறொட்டக்கிடந்த நாய்கள்
ஒருமித்துக் கடலோரம் திரிகிறதே
இரவெல்லாம் தூக்கமில்லையவைக்கு
புதுக் களியாட்டமே நடக்கிறதங்கு

புதிதுபுதிதான இறைச்சிவகைகள்
எண்ணெயில் சாடையாகப்
பொரித்துமனுப்பியிருந்தார்கள்

அரிது அரிது
பொரித்த ஆமை இறைச்சியென்று
அடிக்கிறது கடற்கரையில் கூடிநின்று

முக்குவதும் முணகுவதுமானவொரு சத்தம்
நித்தமது கேட்பதாக பக்கத்திலொரு செய்தி

ஆட்கள்போட்ட சோறுகளும்
ஆங்காங்கே கிடக்கு
காக்கை மட்டுமே
அதுக்குப் பக்கத்தில்நிற்கு

அதையெல்லாம் யாரிப்போ
கணக்கெடுப்பதென்று
நினைத்துக்கொண்டு வரும்வழியில்
நாய்க்கூட்டமொன்று
நீண்டவொரு நித்திரை செய்வதைக் கண்டு
கடற்கரை இனிமேல் நமக்கில்லையென்று
எனக்குள்ளே நானும் சிரித்துக்கொண்டு வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊமைக்கொட்டை**

மரமெல்லாம் உயரவளர்ந்து
மணிக்கொரு பழமென்று
விழவிழ வெருண்டோடும்
வெள்ளைப் பசுக்கள்

பழமென்றுகண்டு பார்த்துவந்து
பாடாய்வைத்துக் காலால்தட்டி
பல்லால்வழித்துப் பாணியைசூப்பி
உள்ளேயெடுப்பது ஊர்மாட்டுக்கொருகலை

மாடுசூப்பி மயிரிழந்த மண்ணில் கிடக்கும்
உயிரிழந்த பனங் கொட்டைகள் எங்களூரில்
ஊமைக்கொட்டைகள் என்பார்

இவை எண்ணில் அடங்காது
எங்களூர்த் தோட்டங்களில்
காடுபத்திப்போய்க் கிடக்கும் கற்பகத்தரு
ஓலைக்குள்ளே கேடுகெட்டுப்போய்க் கிடக்கும்

ஓடுடைந்த ஒன்றுக்குமாகாததை
வீடுகொண்டு போய்
விறகுமூட்ட நினைத்தாலும்
பாடுபட்டுச் சேர்த்தும் பலனில்லை

பத்தவைக்க நில்லாது படபடவென்று சத்தம்வரும்
புத்தம்புதுக் கொட்டையிலே பூரானுமெடுத்திடலாம்

எல்லா ஊமைக்கொட்டையும்
வித்தாகிமுளைத்திருந்தால் முத்தானவிருட்சம்
அத்தனை படைப்புக்களும் அகிலத்தில்
ஆற்றலுள்ளவையே

தப்பாக விட்டுவிட்டால்
தண்டனை எமக்குந்தான்
வேளைக்கு வித்தாக்கி
விளைவுகளைப் பெற்றிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கடல்

தாயும் குழந்தையும்
பாயில் படுப்பதுபோல்
நேயம் மிகுந்தவொருகாட்சி
நானின்று கண்டேன்

சோதனை மீதியோ?
அல்ல
வேதனை கூடவோ?

கடலதன் அலையைக்
கணக்கிட வில்லை
அலையிலு மங்கு
சிரிப்பொலி யில்லை

செத்த வீட்டில்
நித்திரை முழித்து
சேர்ந்து படுப்பது
போன்றொரு காட்சி

இத்தனை நாளாய்
இன்முகத்துடனே
இரைந்து அழைத்த
அமைதியின் அர்த்தம்
எதுவெனக் கண்டேன்

என்முகம் பார்க்கும்
தன்மையை இழந்து
தவிப்பதை எண்ணி
தரிசிக்க எனக்குத்
தவறாய்த் தோணுதே

கடலைப் பார்ப்பதும்
சுடலையைப் பார்ப்பதும்
கடலை சுடலையாய் மாறிப்பார்ப்பதும்
எல்லாமே ஒன்றுதான் எனக்கின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்யாணத்தொடர் - I**

நாள் குறித்துவிட்டால்
நடைப்பிணம் தான்
ஓடியோடி அங்குபோய்
ஒழித்துக் கிடப்பதுதான்

சாப்பாடெல்லாம்
சட்டப்படி இருக்கும்
வீட்டுக்கும் அனுப்புவார்கள்
விதம்விதமாய் வீட்டாரும்
விருந்துண்டு களித்திடவே
வெற்றியாய் விளையாட்டு நடந்திடுமே

மாங்கல்யமுருக்க என்று
மாமனார் வந்துபோவார்
சேர்ந்தே உருக்கிடுவார்
சேதாரம் செலவெல்லாம்
சிறிதேனும் எமக்கில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண நாளன்று
கார்வரும் ஊருக்கு
மாப்பிள்ளைத் தோழன்
மார்தட்டிக் கூப்பிடுவான்

பஸ்ஸும் வந்திருக்கும்
பட்டாளம் காத்திருக்கும்
வேட்டிக் கட்டோடு
போட்டோ பலவெடுப்போம்

அம்மா அப்பாவை
அன்றுதான் வணங்கிடுவார்
அன்பைச் சொரிந்தால்
போட்டோவைக் காட்டிப்
புகழ்கள் பெற்றிடலாம்

பெட்டியுடன் மாப்பிள்ளையும்
பெற்றெடுத்தோரும் ஏறக்காரில்
வெடிசுட்டு அங்கு
கொடிகாட்டி விடுவார்கள்

மங்கையின் வீட்டிலே
மணவாளனைப் பார்த்து

புன்னகை பூத்து
புதினம் பார்த்து
கண்டதும் காரை
கட்டுவெடி கொளுத்தி
பெட்டியுடன் இறங்க

குரவை கூத்து கும்மாளம்
நட்டு முட்டு நாதஸ்வரம்
எனப்போட்டு பெட்டிபறித்துக்
கட்டிப்புரண்டெழுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்யாணத் தொடர் - II

கல்யாண நாளன்று
கதிகலங்கும் பெண்வீட்டில்
கட்டிருந்த கறுத்தாடு
கறியாக்க அறுத்தெடுப்பார்

கட்டுவார் வாழைமரம்
கடப்படியில் இருபுறமும்
வெட்டுவார் தொதலை
வெளிக்கிடுவார் எல்லோரும்

கூரையிலே நிறமூட்டி
குழலிருக்கும் இருபுறமும்
வேலியிலே தொடங்கி
வீடுவரை குருத்திருக்கும்

சேலையிலே சித்தரித்து
செம்மையான மணவறையும்
ஊரினிலே கட்டுவார்கள்
ஊரவர் சேர்ந்தங்கு

காலையிலே மாப்பிள்ளைக்கு
கார்போகும் ஏற்றிவர
களிப்போடு நிற்பார்கள்
கட்டியாய்த் திரண்டுவர

ஊர்பஸ்ஸும் சோடித்து
ஒன்றாகப் புறப்படலால்
ஓட்டமும் நடையுமாய்
ஊரார்கள் ஏறிடுவார்

மாப்பிள்ளை காரினிலே
மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து
மனையாளின் அணிகலனும்
மாரோடு தங்கைவைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடும் காட்சியாகப்
பெட்டி பறித்தல் நடக்குமங்கு
பெண்டுகள் விளையாட்டைக்
கண்டு களிப்பார்கள்

ஆட்டுக்கறி மூக்கைப்பிய்க்கும்
ஆணம் அடுப்பில் கிடக்கும்
சாத்திக்கட்டிய குழலில்
சௌந்தர்ராஜன் பாட்டுப்போகும்

கூட்டும் குழம்பும்
கும்மாளம் போத்தலுடன்
ஊத்திக் கொடுக்க
ஓரிமூவையில் இழுப்பார்கள்

கண்ணூறு கழித்துக்
கால் கழுவி
பண்ணாத எல்லாம் பண்ணி
பந்தலுக்குள் வர

மந்திரம் ஓதி
மாங்கல்யம் அணியும்
சம்பிரதாயம் சங்கொலியோடு
சபையை அடக்கும்

விருந்துண்டு வேட்டையாடி
குடித்துண்டு கூத்தாடி
மருந்துண்டு மயங்கி
மண்கவ்விக் கிடந்து
மறுநாள் செல்வதுமுண்டு

சோத்துக்குள் உப்பில்லை என்றும்
சொதிக்குள் எலும்பில்லை என்றும்
பார்த்துக் கவனிக்கவில்லையென்றும்
பசுமாட்டுத் தயிரென்றும்
சேர்த்துக் கதை சொல்லி
செந்தமிழில் வசை நடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களூர் சித்திரைத் தொதல்

சித்திரை வந்தால்
நித்திரையில்லை
குத்துவோமரிசி
கொத்துவோம் நாவல்விறகு

பால்புழிய வேண்டும்
பாகெடுக்க வேண்டும்
படமொன்றே ஓடும்
எனக்கப்போ கனவிலே

குளத்தடி மரத்தினிலே
குலையோடு நிற்கும்
பழுத்த தேங்காயெல்லாம்
பார்த்து நான் ஆய்ந்து
பத்திரமாய் வைத்திருப்பேன்
பாலெடுத்து தொதல்கல்ல

பயறோடு முந்திரி
பருப்பு ஏலக்காய்
எள்ளொன்று எல்லாம்
அளவோடு எடுத்ததனை
அடுப்படியில் வைத்திருப்பேன்

பழத்தேங்காய்ப் பாலினிலே
பச்சரிசி மாக்கலந்து
மாவினது அளவுக்கு
மாறாது சீனியிட்டு

மணிக்கணக்காய் தாச்சிவைத்து
நின்றங்கு அருகே
உழவாரம் ஒன்றாலே
உரசி உரசி ஆட்டிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகு நெருப்புக்கு
முறுகி வரவங்கு
முந்திரிப்பருப்பை
முறையாகப் போட்டு
எள்ளு ஏலக்காயென்று
எல்லாமே போட்டு

கல்லு கல்லென்று கல்லி
கடைசியிலே வரும்
எண்ணெயையுமெடுத்து
தள்ளித்தள்ளித் தாச்சியைத்
தாலாட்டிப் புரட்டிக்
கொள்ளியையணைத்து
கொதிப்பைக்குறைத்து
அள்ளித் தொதலை
வெள்ளிச்சட்டியிலே
நள்ளிரவில் மாற்றும்நான்
கல்லும் கறுத்தத் தொதல்
கடிக்க ருசிதானென்ன?

சித்திரைத்தொதலைச் சீலையால் மூடிவைத்து
சிதையாமல் வெட்டி சினேகிதருக்குப் பகிர
கத்தியொன்று வைத்துள்ளோம்
அதன் கைப்பிடியும் வெள்ளியிலே

கடைசியாகத் தாச்சியிலே
அடிப்பிடித்ததையெல்லாம்
வழித்தெடுத்துக்
கரிப்பிடித்ததைக் கழித்துண்ணும்
ஆனந்தமும்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வீட்டு ரேடியோ

எங்கட வீட்டில இருந்தவொரு ரேடியோ
ரெண்டு பேர் வேணும் தூக்கி அதைவைக்க
ஒன்றுடன் ஒன்று மோதாம இருக்க
உயர்த்தி வைப்போம் அலுமாரிக்கு மேல

வெட்டயில் எடுத்து வெற்றி மாத்திற
சட்டயும் போட்டு சரியா வைக்கிற
கட்டதான் மாத்திற கொஞ்சம் கஷ்டம்
வெற்றிபோடிற அன்று வேடிக்கைதான் எனக்கு

ஆறு வெற்றியை அப்பா அடுக்கித் தருவார்
அதை அணைத்துப்பிடிப்பேன் மாத்திற வரைக்கும்
தட்டிபோலத்திறக்கத் தாவிப்பிடிக்கக் கம்பியுமுண்டு
குட்டிபோடும் குஞ்சுவைக்கும் இனம்
கூடிக்களிக்கும் அதற்குள்ளே

வெற்றி போட்டெடுத்தால்
விடியக் காலையில் விண்ணைப்பிளக்கும்
பொங்கும் பூம்புனல்
ஒளிபிறந்தபோது மண்ணில்
உயிர்பிறந்ததென்றும் ஒலிக்கும்

மக்கள்வங்கி விளம்பரமொன்று
அத்தானே என்றதுவழைக்கும்
பூவும்பொட்டும் மங்கயர் மஞ்சரி
பூத்துக்குலுங்கும் மாலையில்நன்றாய்
போட்டுவிடுவோம் ஊரெல்லாம் கேட்கும்.

திரைக்கதைவசனம் தினமும் இருக்கும்
எனக்கது எப்போதும் நன்றாய்ப்பிடிக்கும்
தேன்கிண்ணம் இரவு தேனாய்ப்பொழியும்
நானந்த இடத்தில் பாடாய்ப்படுப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது படுக்கை அறை

படுக்கையறை சிறைப்பிடித்த ஒளிக்கீற்றொன்று
இடைக்கிடையே முறிந்து வந்து கிடையாய்க் கிடக்கு

சிறைப்பிடித்த ஒளிக்கதிரில்
சில துகள்களங்கு
சில்லறையாய் சில சமயம்
விளையாடக் காண்பேன்

வந்தவழி எங்கேயென்று
நானும் பார்த்து
தொல்லைதராது போவென்று
துரத்துவது முண்டு

பல்லையிழித்தபடி பகல்முழுதும் விளையாடும்
பாவம்
சொல்ல சொல்ல போகாது சொர்க்கம்தானதற்கு
என் அறை

வெளியிலிருந்து வருவதனால்
வீட்டிற்குள்
நளினநடை போட்டு என்னோடு
நையாண்டி பண்ணும்

காலையிலே சொல்லாது வந்து
என்னைக் கதிகலங்க வைக்கும்
கண்முன்னே நின்று
பொல்லாத இடமல்லவோ
எனது படுக்கையறை
பொறிவைத்து உடல் காக்கும்
சிறிய அறை

நன்றாகத் தெரியும் என் வீட்டார்க்கு
நான் ஒருவன்தான் வயது கூடியவனென்று
சிறு அறையைத் தரவேண்டுமென்று சிந்தித்து
ஒளியோடு விளையாட வைத்துள்ளாரின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிந்த கவிதை

குடியிருப்பு இருளடைந்து
குரல்வளைக்குச் செல்ல
குழலாளும் விழி சிவந்து
படுக்கையறை செல்ல

கவியொன்றை வடிக்கவென
கருவொன்றைத் தேடிக்
கனவுலகில் மிதந்து
கண்டுகொண்டேன் கருப்பொருளை

மறைபொருளாய் வைத்துள்ளேன்
உருவொன்றைக் கொடுக்க
மறக்காமல் வடித்திடுவேன்
நாளையதைச் சுவைக்க

பழைய சில கவிதைகளும்
பாதியில் கிடக்கு
பாங்குடனே தொடர்ந்து விட்டால்
பார்த்திடலாம் இன்று

திடம்கொண்டு எழுதவேண்டுமென
நான் நினைக்க
தீயவர்கள் என்னையின்று
திட்டுகிறார் இங்கு

எட்டிப்பார்த்த என் சின்னவன்கூட
இன்றோடு இதையெல்லாம் விடோணுமென்று
கண்டமாதிரிக் கதைத்துக்கொண்டு சென்று
கண்டிப்பாக உத்தரவும் போட்டிருக்கான் இன்று

கருவெடுத்ததே பிழைபோல
பார்த்தால் இருக்கு
காரியமும் நடக்காமல்
குறையாய்க் கிடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மட்டக்களப்புத் தயிர்**

முதியான்கண்டுப் பாலுக்கு
முதல்நாளே சொல்லிவைத்து
கரயான்குளக் கட்டால
கால்நடையா நடந்துசெல்வோம்

காலயடி போயிருவம்
வேளைக்கு அங்கே சனம் நிற்கும்
கன்று கட்டியிருக்கும்
காளை ஏறிநிற்கும்

கன்று குடித்துக் கறவை முடித்துக்
காலயைத் திறந்து
பால் தருமட்டும்
நொந்து கிடப்போம்
வந்து தரமாட்டாரா என்று?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட நிண்ட இடமெல்லாம்
பாலெடுக்கப் போகாமல்
கள்ளுக்குடியரிட்ட தான்
காலம்காலமாய் எடுப்போம்

சொல்லத்தான் முடியாது
உள்ளத்தால் பெரியவரே
மெல்லத்தான் கதைப்பார்
வெல்லத்தான் விளையாட்டு

காசைச்சரியா எடுத்து
கடுகதியில் போகச்சொல்வார்
கட்டாலே முட்டியநான்
கைமாறித் தூக்கி வந்து
பெத்தாட்டக் கொடுத்தா
அத பத்திரமாய்வைப்பாவு

கொள்ளி யடுப்பில் நெருப்பு
கொழுந்து விட்டு எரியுமங்கு
தள்ளிக் கிள்ளிப் போகமாட்டோம்
தணல் பறக்கும் என்றாலும்

அள்ளி அதையெடுத்து
ஆத்திக்குடிக்க ஆசைதான்
தண்ணீர் வத்திவர
தடித்து அங்கு பாலெழும்பும்

சின்ன நுரையெழும்பி
சின்னஞ்சின்னனாய் உடைந்து
அகப்பையிலது ஒட்டும்
அப்போதொரு அழகும்வரும்

அந்த நேரம் ஆச்சி சொல்வா
அருமையான பாலிதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திக்காய்ச்சி ஆறவைக்க
அடுப்பை அணைப்பாவு

கருமல் மணமெழும்பும்
பக்கத்தில் நிற்க
இருமலும் நமக்கெழும்பும்

புதுமுட்டி சூடாக்கி
புதுப்பாலை ஊற்றிவிட
புசுபுசென்று சத்தம்வரும்
(நுரை) பூப்போல மேல வரும்

தூக்கியதை மூத்தப்பா
தூசற்ற இடத்தில்வைத்து
ஆசையாய் சாப்பிட (நாம்)
ஆட்டிக்கீட்டிப் போடாதே என்பார்

நகச்சூட்டில் உறமோரை
நன்றாகப் போட்டுவிட
கட்டித்தயிர் முட்டியிலே
காலையில் உறைந்திருக்கும்

அது எங்கள் கையிற்பட்டால்
களராம மணத்தோடயிருக்கும்
மட்டக்களப்பு வந்தால்தான்
இந்தத்தயிர் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழந்தமிழ்ப் பெண்கள்

கோயில்மணிக்கு முன்னதாகக்
கோதிக் கொண்டையிட்டு
கோடிக்குள் சென்றுவந்து
கொளுத்துவாள் விளக்கை

படுக்கைமடித்து பாயையுஞ்சுத்தி
எடுத்தவிடத்தில் ஏத்திவைத்து
இடுக்குக்குள் சென்று
ஈர்க்கிற் தடியெடுத்து

முத்தங்கூட்டி முன்பின்கூட்டி
கடப்படிகூட்டி அடுப்படிகூட்டி
கிணத்தடிகூட்டி அழகாய்வைப்பாள்
ஆனந்தமாக

குச்சைமுறித்துப் பல்லுத்தீட்டிக்
குனிந்துநிமிர்ந்து கைகால்கழுவி
முகமுங் கழுவித்
தண்ணீரெடுத்துத் தேனீர்போடவே
கொள்ளியடுப்பில் கொதிக்கவைப்பாள்

கொதிக்கிற வரைக்கும்
குளிக்கிற தண்ணியைக்
கிணத்திலே அள்ளி
நிரப்பியும் வைப்பாள்

பூவை ஆய்ந்து
சாமிக்கு சாத்திப்
பொட்டொன்றும் வைத்துப்
பொலிவுடனிருப்பாள்

கண்கண்ட தெய்வத்தின்
முன்னின்று கொண்டு
காலைப் பிடித்து
எழும்பச் சொல்வாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளணைக்கங்கே
பள்ளிக்குப் போக
வேளைக்கே பிள்ளையை
எழுப்பி விடுவாள்

தேநீரைக் கொடுத்து
தெய்வத்தை வேண்டி
கணவனை அனுப்பக்
கடப்படி செல்வாள்

பள்ளிக்குப் போகும்
பிள்ளைக்குங் கூட
பால்சோறு பழஞ்சோறு
பயறுகளிகூழ் கஞ்சி அவலென
விதம்விதமாக செய்திடுவாள்

அள்ளிக் கொஞ்சிப்
பிள்ளையையெல்லாம்
ஆனந்தமாக
அனுப்பி வைப்பாள்

வெள்ளிக் கிழமை
வீட்டைக் கழுவி
விதம் விதமாக
மரக்கறி சமைப்பாள்

பூவைச் சூடிப்
புன்னகை போட்டு
அன்னத்தின் நடையில்
ஆலயம் செல்வாள்

அவள் போகும்போது
கூந்தல் தண்ணீர்
சட்டையில் விழுந்து
சாரிக்குவருவதைப் பார்த்திடலாம்

ஆண்டவனிடத்தில்
ஆசியைப்பெற்ற அவளைப்பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ மகளாகத்
தோற்றம் கொள்வாள்

வழியில், சாதிசனங்களின்
நலன்களை யறிந்து
நாயகன் காதில் ஊதிடுவாள்

வீட்டிற்கு வந்து விறகுகள் சேர்த்து
வேலிக்கீரை தகரை காரை கானாந்தி
முஸ்தை முல்லை முள்முருக்கு
குறிஞ்சா கொவ்வை குப்பைக்கீரை
முருங்கை பொன்னாங்கன்னி
கும்மட்டி முடக்கொத்தான் மாம்பாஞ்சான்
மொசுமொசுக்கை அகத்தி பொன்னவரை
தேங்காப்பூக்கீரை என்றெல்லாமாய்ந்து
புதிய வகையில் புருஷன் விரும்ப
உள்ளியும் போட்டு உழுவைமீனும் போட்டு
சுண்டியும் சுவை பார்த்தும் வைத்திருப்பாள்

பள்ளி விட்டுப் பிள்ளைகள் போக
பறந்து திரிந்து பாசம் கொள்வாள்

அவள்,
கடப்படியில் கண்ணைவைத்து
கணவனைப் பார்த்து
காத்துங் கிடப்பாள்.

முன்னே உண்ண
கணவனுக்கங்கு
முழுவதும் கொடுத்துப்
பார்த்திருப்பாள்

நன்றாயுண்ணக் கணவனுக்கங்கு
நாளைக்கு என்ன
செய்யவென்பாள்
அன்பான மனைவியே அந்தக்காலம்
அவர்களைப்போல ஆகுமெந்தக்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலப்பம்

பாலப்பம் என்றால் வாயூறு திப்போ
பாலப்பம் சுடும்போது பக்கத்தில் பார்த்திருப்பேன்
பள்ளிக்குப் போவதற்குப் பாலப்பம் சாப்பாடு
பசுபதிக் குஞ்சாத்த பதமாகச் சுடுவாவு

பக்கத்தில் நானிருந்து பார்த்ததை ரசிப்பேன்
பச்சரிசிமா பால்போலக் கரைத்திருக்கும்
பழுத்தேங்காய்ப் பாலும் உடனிருக்கும்

சட்டியில் சுட்டால்தான் சட்டப்படி அதுயிருக்கும்
சட்டியைப் பழக்கிற கதையொன்றும் உண்டு
அடுப்பில் சட்டிவைத்து அடிக்கடி துடைத்து
துடைத்த இடத்தில்தான் கரைத்தமா விடுவாவு
விட்டுவிட்டு அளவாக அகலமாய் எடுப்பாவு

அதற்கு மேல்அளவுக்குத் தலைப்பாலை விடுவாவு
சட்டியை மூட வேண்டும்
சட்டிக்கு மேல் சட்டிவைத்து
சட்டியிலும் நெருப்பை வைப்பதுண்டு

பாலப்பச் சட்டியைப் பலதடவை திறந்து
பதமும் பார்ப்பாவு
பத்திக்கித்திப் போனால் அதை
வித்துக் கொள்ள மாட்டாவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லிலும் ஒட்டும் பார்த்தால் அதை
லேசாய் மதிக்கலாம்
கறுப்பாயிருக்கும்
கையெல்லாம் ஒட்டி விடும்

அப்பக்கருக் கென்றால் உடையும் அருகாக
அதையெடுத்து வாயில் வைக்க சுப்பராயிருக்கும்
அப்பம் பதமென்றால் சட்டியை மேலெடுத்து
தட்டித்தட்டி சாடையாக புட்டுக்கிட்டுப் போடாமல்
தட்டில் வளத்தாட்டி பாடாக வைப்பார்கள்

இதுக்கிடையே அடுத்தப்பம் அடுப்பில்தானிருக்கும்
பார்த்துக் கொண்டிருந்தால் பள்ளிக்குப் போக இயலாது
கேட்காமல் இருப்பேன்
இல்லையேல் கெதியாகப் போகவேணும்

வீட்டுக்குப் போனால் விடமாட்டாவு என்னம்மா
பள்ளிக்குப் போவென்று பதறும் மனிசி அப்போ
அடுக்கி வாங்கி வந்த அப்பத்தைக் கொடுத்து
அதனுள் கொஞ்சம் சீனி தூவித் தருவாவு

ஜோடியாகத் தின்றால் நடுவில் சீனி இருக்கும்
பாதியாகத் தின்றால் ஒரு பக்கம் சீனியிருக்கும்
ஜோடியாகத்தான் நான் சாப்பிடுவேன் எப்போதும்

அப்பத்தை சாப்பிட்டால் அன்றெல்லாம் நித்திரைதான்
அரைவாசி நமக்கு மண்டைக்குள் ஓடாது

விறுதாக்கு வெளிக்கிட்டு உவெஸ்லிக்குப் போவதுதான்
விழுந்து விழுந்து மேசையில் தூங்கத்தான்
ஒன்றும் விளங்காமல் வந்தே வீடும் சேர்வதுதான்
பள்ளிக்குப் போகமுதல் பாலப்பம் சாப்பிட்டால்
படுக்கிற சாமானையும் எடுத்திட்டுப் போகணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மண்வாசனைக்கவி**

ஆழ்மனதில் நினைவிருக்கும்
அதுநன்கு உறங்கியிருக்கும்
அசைவொன்று கொடுத்துவிட
அது தானாய் எழும்பிவிடும்

மண்வாசனைக் கவிதையெல்லாம்
மற்றவைகள் போலல்ல
தோண்ட வேண்டும் ஆழ்மனதைத்
துல்லியமாய்ப் புதையல்காண

சிந்தனைகள் பலவங்கு
சேமித்து இருக்கின்றன
அந்தநாள் நினைவல்லவோ
அதற்கிப்போ வயதல்லவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் பாராமல்
ஆழ்மனதுள் உள்நுழைந்து
அதனுள்ளே கருத்தேடிக்
கருவதனைத் தலையில்கட்டி
தமிழிலே சுவைதேடி
விழியை ஒளியாக்கி
விழியாமல் கிடந்திடவே

களிப்பைக் கொடுத்திடும்
சுவைக்கும் பொருளோடு
மலைக்கும் விதமாக
மொழிக்கு நடையமைத்து
மொழிந்திடும் இடங்கண்டு
கழிக்கும் காலத்திலே
கவிதை வடிகிறது

அப்போ,
என் நா வறண்டு வரும்
நாசியில் அது ருசிதட்டும்
பேசியில் ஓசை வரும்
பேசாது நானிருப்பேன்

கண்கள் சிவந்து வரும்
கார்குழலாள் தூங்கியிருப்பாள்
தண்ணீர்தான் இருக்குமங்கு
தாகங் கலைப்பதற்கு

என்ன செய்வதென்று
எழுதத்தொடங்க நானும்
கையிலே பேசி வைத்து
கண்களை அதிலே வைத்து
எழுத்தைக் குறிவைத்து
குறிக்கு விரல் வைத்து
விரலுக்கு விசை கொடுக்க
விரைந்தங்கு எழுத்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை,
வசமாய் இணைத்தெடுத்து
வரிசையில் அதை வைத்து
வரியை சரியாக்கி
வார்த்தைகளை ஒழுங்காக்கி
வடிவம் வரும் போது
விடியத் தொடங்கி விடும்

கவிதை எழுதுகிறேன்
என் கஷ்டம் தெரிகிறதா?
கஷ்டம் இருந்தாலும்
மனிதர் மகிழ்வதற்காய்
தினமும் அளிக்கின்றேன்
இளைஞர்களும் ஏராளம்
இணைவதையும் காண்கின்றேன்.

வளருகின்ற சமுதாயம்
வாசிக்கத் தொடங்கிவிட
வளர்கவிகள் பலபேரை
வசமாக வளர்த்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முடிவெட்டல்**

*முடிவெட்ட என்றால் முழிசிப்போய் இருப்போம்*
*தலைமயிர் வெட்டினால் தலைவலி எனக்கு*
*தலைமுடி வெட்டாமல் பள்ளிக்குப் போனால்*
*தலைமை வாத்தி தலையில் வெளுப்பார்*

*சைக்கிளில் போவோம் முடிவெட்ட நாங்கள்*
*கரியறிலிருந்து அப்பாவைக் கட்டிப் பிடிப்பேன்*
*அப்பாவே சைக்கிளை அழகாக மிதிப்பார்*
*அதற்கப்போ இல்லை பெல்லும் பிறேக்கும்*

*முன்னால் வந்தால் சொல்லால் விலக்குவார்*
*நித்தாட்ட வேண்டின் நின்று அமத்துவார்*
*அப்படியான சைக்கிளைக்கூட*
*அநியாயமாகக் கள்ளனெடுத்தான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனைக்கு மகிழ்வுடன் நாமும்
முடிவெட்ட அங்கு சலூனுக்குப் போவோம்
விஜயா சலூனில் விரைவாக வெட்டலாம்
வீரக் குட்டியே வெட்டி விடுவாரு

கதிரைக்கு மேலே உயரத்தைப் போட்டுக்
கண்ணாடிக்கு எதிராய் முன்னாலே இருத்தி
பொன்னாடை போல போர்த்து எமக்கு
அண்ணாரச் சொல்லி அதட்டியும் விடுவார்

கல்லொன்று இருக்கும் பள பளவென்று
கத்தியும் இருக்கும் வழிக்க நமக்கு
கத்தியைத் தீட்ட பட்டியும் இருக்கும்
பவுடருமிருக்கும் அதற்குள்ளே பஞ்சும் இருக்கும்

மெஷினொன்று இருக்கும் மிருகத்தைப் போல
அதைப்போட்டு வெட்டுவார் உயிரங்கு சாக
மயிரையும் பிடுங்கி மெஷினது எடுக்கும்
மறுபக்கம் பார்க்க தலையது கடுக்கும்

திரும்பினால் கத்தி தருமங்கு வெட்டு
குனிந்த குனியாக இருக்கவே வேண்டும்
குளறிக் குளறிக் கும்பிட்டு இருப்பேன்

கடைசியாய்க் கல்லைக் கழுத்தில் வைப்பார்
காய்ந்த கொச்சிக்காய் போலது பத்தும்

முடிவெட்டு முடிய முகத்தினைக் கழுவி
கடிபட்ட காயத்தில் கல்லையும் வைத்து
கட்டிய துணியைக் கழுத்தினால் அவிழ்த்து
கதிரையால் எம்மை இறக்கியும் விடுவார்

வரும்போது அப்பா விருந்துகள் தந்து
வசமாக எங்களை அழைத்தும் வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கடலலை**

காலையிலே உன்னழகில் முழிப்பதற்குக் காத்திருப்பேன்
கரையாலே நடந்துவந்து உன்னழகை ரசித்திடுவேன்
ஊசலாடும் உன்னெண்ணம் என் உள்மனதில் எந்நாளும்
ஒழிந்திருந்து வெளியாகும் உனைக்கண்டு விளையாட

சிரிப்பாய் சில நேரம்
சிந்திப்பாய் ஒரு நேரம்
கொடுப்பாய் அடி கூட
கொந்தளிப்பாய் பயங் காட்ட

நடிப்பாய் எனையழைக்க
நையாண்டி காட்டிக்கொண்டு
பிடிப்பாய் உன் சுழிக்குள்
பிணமாக்கிக் கரை சேர்க்க

காலையிலே நான் வந்தேன்
கனவிலும் நினைக்கவில்லை
கொடுப்புக்குள்ளே தண்ணிவைத்து
கொப்பளித்தாய் முகத்தினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கர்வத்தைக் கண்டுகொண்டேன்
எனக்கது பிடிக்கவில்லை
ஏனதனைச் செய்தாயோ
இன்னுமே தெரியவில்லை



சிறுவயதில் கேள்வியுற்ற
பழமொழி ஒன்றுண்டு
அனுதினம் போயிருந்தால்
அவ்விடத்தில் மதிப்பில்லை

அப்போதே சிலர்
அறிவுரையும் கேட்டதுண்டு
அகோரம் நீ கொண்டால்
ஆட்டிப்படைப்பாயென்று

சிகரத்தைத் தொட்டது போல்
சினம் கொண்டே நீ
சுனாமியாக வந்தல்லோ
சுவீகரித்துச் சென்றாயே

உன்னுடன் விளையாட
உயிர்போகும் என்பார்கள்
உறங்குவது போலிருப்பாய்
உன்னுள்ளத்தில் என்னவோ?

உயிரை நான் காப்பாற்ற
உனக்கருகே வரமாட்டேன்!
கரையிலே கண்டுன்னைக்
களிப்புறுவேன் இனிமேல்நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கரைவலைக்கூலி**

அலவாக்கரைக்குள் ஓர் அழுகுரல் கேட்கும்
அம்பா என அதை அழைப்பதுமுண்டு
வம்பாய் வெயிலில் வலையிழுக்கும்
வசதியற்றவன் கதை கேட்போம்

காலையில் வந்து கயிறு தொட்டால்
காலை உதைத்து இழுத்துக்கொண்டு
காசு பிரித்து வரும் வரைக்கும்
கஷ்டப் படுவதைக் கண்டுள்ளேன்

முழுவெயில் அவனது முழு உடம்பும்
முழுமழைபெய்ய முழுகிடும் முழுவதுமாய்
கதிகெட்டவொரு மனிதனைப்போல
கஷ்டப்படுவான் கரைவலைக்கூலி

வெயிலோ அவனை வாட்டி விட
விரைந்தே ஒழுகும் வியர்வையுமே
சட்டையெல்லாம் சவராக
ஒரு கட்டைபோல அவன் நடப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டு வயிறு ஒரு பக்கம்
ஓட்டைச் சட்டை அது பறக்கும்
பார்த்துப் பார்த்து இழுத்திடுவான்
பார்த்தால் அவனைப் பரிதாபம்

சோத்துக்காக ஆடுகிறான்
சொந்தத் தொழிலைப் பழகவில்லை
நேற்றும் கூட ஒன்றுமில்லை
நெடுகிலும் அவனுக்கு இதுதானோ?

வறுமையொருபுறம் வாட்டுது அவனை
வளங்களொன்றும் அவனுக்கு இல்லை
சனங்களைப் போல சிந்தித்தால்
சரியாய் அவனும் வாழ்ந்திடலாம்

இவன்போல் நானும் சிலகாலம்
இந்தத் தொழிலில் ஈடுபட்டேன்
இனிதே வாழ முடிவெடுத்தேன்
விட்டு வந்தேன் அத்தொழிலை

சூடுசுரணை இல்லாதோர்
சுதந்திரமாகச் செய்திடலாம்
விதிதானென்று விட்டதனை
கதியில்லையென்றே கழித்திடுவான்

கெதியாய் அவனும் முடிவெடுத்தால்
மதியால் விதியை வென்றிடலாம்
நாதி யற்றோர் சொல்லுகின்ற
நல்ல வார்த்தை அதுதானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கட்டுச்சோறு**

காலையில் நான் எழும்புகையில்
கமகமவென்று கறிமணக்கும்
தலைவாழை இலையொன்று
தடம்மாறி அங்கிருக்கும்

தண்ணியால் அதைக்கழுவித் தணலில் பிடிக்கையில்
தள்ளாடித் தவழ்ந்து தலைகீழாய் மடியுமது

அடுப்பில் நெருப்பிருக்கும்
அளவாய் சோறு அமிண்டிருக்கும்
கறிகள்கனமாய் ஆக்கியிருக்கும்
கறிவெங்காயமும் உடைத்திருக்கும்

தலைவாழை இலையைக் கிடையாய்
வளத்தாட்டிப் படையாய் இடுவா அம்மா
பகலைக்குக் கொண்டு சாப்பிட நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுவிட்டு இலையில் சோத்தை
பார்த்துக் கொண்டிருந்து
சூடு கொஞ்சம் குறைய
உப்பை அளவா விட்டு
மீனை வைத்தும்
மிளகாயைப் பொரித்து வைத்தும்
சுண்டலைச் சுத்தி வைத்தும்
பொரியலைப் புகுத்தி வைத்தும்
இயன்ற அளவுக்கு எல்லாம் வைத்தும் கூட
மேலாய்க் கொஞ்சம் சோற்றை
மெல்லிசாய்ப் போட்டு அங்கு
வாழை இலையை மூடி
வரிந்து கட்டியதனைத்
தாளைக் கொண்டு சுத்தித்
தந்து விடுவா அம்மா

காலை கொண்டு போய் கண்டி பஸ்ஸில் ஏறி
காலில் வைத்திருக்க (அந்த) சூடு நல்லா இருக்கும்

கண்டி சென்று இறங்கி
கடைக்குள் போய் நானும்
அங்கு இங்கு பார்த்து
யாரும் இல்லை என்றால்
அவிழ்ப்பேன் அதை வடிவாய்

அந்த மாதிரி இருக்கும்
அவிழ்த்துப் பார்த்தால் தெரியும்
கத்தி வேணும் வெட்ட
கல்லுக்கட்டி போல

கையை விட்டால் தெரியும்
கண கணப்பாய் இருக்கும்
பொரித்து வைத்ததெல்லாம்
பொரிமிக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்து வைத்ததெல்லாம்
பிரிந்து அங்கு இருக்கும்
சேர்த்து வைத்ததெல்லாம்
சேர்ந்து அங்கு இருக்கும்
உடைத்து வைத்த முட்டை
சிரித்துக் கொண்டு இருக்கும்

எடுத்தெடுத்து அடிச்சா
இன்பமாத்தான் இருக்கும்
திண்டு போட்டுப் பிறகு
திகன பஸ்ஸ எடுப்பன்

குண்டசாலை சென்று
குத்துக்கரணம் போட்டு
கட்டில் மீது பாய்ந்து
கவலையோடு படுப்பேன்

ரெண்டு நாளைக்கு இதனை
தினமும் நினைத்து மகிழ்வேன்
இப்போ,
கட்டுச்சோறுமில்லை கட்ட எவருமில்லை
கட்டியிருக்கம் கழி ஆணம்
விட்டுக் கொள்ள முடியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டி

கடலோரம் நீராட வருகின்ற நீ
நனையாத முழு ஆடையுடன்
வருவது ஏனோ?
முழுதாக உடையுடுத்தி நீயிருந்தும்
என்முகம் பார்த்து ஓடி
மறைவதுதான் ஏனோ?

ஆப்புக்கள் வைத்தது போல்
கடலோரம் நின்று
உன் நாக்குகளைக்காட்டி
என்னையழைப்பது கண்டு
அருகாக வந்து நான்
அணைப்பதற்கு எண்ணி
என்னையறியாமல் அவ்விடமே
நின்றிடச் செய்வாய்

அலையெல்லாம் குளிப்பாட்ட
ஆனந்தம் கொள்வாய்
அவையெல்லாம் சென்றுவிட்டால்
குளிர்காய்வாய் - அங்கு
தினந்தினம் குளிப்பதாலோ
உன்முகங்காட்ட மறுப்பாய் - அல்ல
தீமை செய்யும் மனிதர்களை நீ
காணக்கூடாதென்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலே நீயொரு உல்லாசப்பயணி
உடல் முழுவதும் உடையணிந்த
உள்ளூர்ப்பயணி
ஒன்றுங்கூடக் குறைவில்லை
உமக்கு உன்வாழ்வில்
சென்ற பிறப்பில் நீ செய்த
கருமபலன் தானோ?

உப்புக்காற்றில் உலரும் உன்னாடைகள்
மெத்தம் பிரகாசமாக ஆகிவிடுவது கண்டு
செத்துப்போனாலும் உனை
எத்தனைபேர்
சேகரித்துச் செல்லவென
கடற்கரைக்கு வருவர்

செத்துப்போன உன்
உடலைக் கொண்டு
தீ மூட்டித் தகனக் கிரியைகள்
செய்வோருமுண்டு
வெண்மையாக வெளிவரும்
உன் சாம்பல்கொண்டு
வெள்ளையடித்து வீடுகளை
அழகு பார்ப்பவருண்டு
வெத்திலைக்குப் போட்டு சப்பித்
துப்புபவருமுண்டு

நண்டுப்படையுனக்குப்
பெரும்பாதுகாப்பு
ரோந்து சென்றுகொண்டிருக்கும்
உனக்குத் தொடராக அங்கு

பங்கர்களடித்து அவர்கள்
பதுங்கிக்கொண்டு
இராப்பகலாய் விழித்திருப்பர்
முழுநாளுமங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரி, சங்கு உன்னுடன்பிறவா சொந்தங்கள்
தேடிவந்து உனைதினம் சுகங்கேட்கும்
அங்கு
கோடிப்பெறுமதி சிலவேளை உங்களுக்கு
உண்டு
ஆடிப்போவம் அதைக்கேட்டு அனைவருமே
அன்று

மாளிகைக்கும் நீங்கள்
மங்கைகட்கும் நீங்கள்

அள்ளிக்கொடுப்பீர் உங்கள்
அழகையெல்லாம்
பொங்குதமிழ் கொண்டாடி
புலம்பெயர்ந்து
வண்ணத்தமிழில்
வாழ்த்துரைத்து
செல்லத்தனமாய்
சென்றிடுவீர்
அவர்களுடனங்கு

உயிரோடு இருக்கையிலே எனைப்
பார்க்க மறுத்தவளே
உன்னுயிரற்றுப்போன பின்பே உலகமே
உனைப் பார்க்கிறதே

இருந்தாலும் உயிருடன்
உனக்கு நல்ல பெறுமதி
இறந்தாலும் உன்னுடைக்கும்
அதைவிடவும் பெறுமதி
பெரும்பாலும் மனிதனுக்கும்
இவ்வாறு அமைந்தால்
பேரின்பம் பேரின்பம் பேரின்பமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லாத்துக்கூனி

கல்லாத்துக் கூனி கலப்படம் ஏதுமில்லா
சில்லறையாய் வாங்கும் சிவத்தக் கூனியது
புளிபோட்டுச் சமைப்பதற்குப் பொல்லாத சாமான்
எல்லாக் காலமும் அது கிடையாது

பெண்டுகள் ரெண்டு சேர்ந்து
புடைவையைப் போட்டிழுத்துக்
கந்தல்கள் வெளியாக்கிப் பானையில்
கட்டியிழுத்து வருவாங்க

கண்டது நிண்டதெல்லாம் கலந்து கிடந்தாலும்
கஷ்டப்பட்டுக்கழுவிக் கூனியைப் பத்திரமாய் எடுப்பாங்க
பூவரசமிலையிலே போட்டு அதையெடுத்து
பெட்டிக்குள் வைத்து விற்க வருவாங்க

பொரியலுக்கும் போட்டதை மாங்காய்க் கடையலுக்கும்
சுண்டலுக்கும் சுதியாகத்தான் அது இருக்கும்
தின்றாலும் கனக்க ஒன்றாலும் முடியா
தடுக்க வயிற்றுக்கடுப்பை

சூடு கொஞ்சங்கூட பாடும் கொஞ்சம் அதிகம்
பதப்படுத்தியெடுத்தால் மதிப்பென்ன அதன்
கல்லாத்து சென்னக்கூனி கட்டாயம் தின்று பாரு
கல்லாற்று ஆட்களிடம் கேட்டுப்பாரு அதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரைவலை**

கரையிலிருந்து கயிறுகொடுத்துச்
செல்லும் தோணி
காரியப்பர் முகரியிலே
கால்கூட்டி இருப்பார்

கடலினிலே இறங்கிவரும்
கருங்கண்ணி காணக்
காத்துக் கிடப்பார்
கண்வைத்துக் கடலில்

கறுத்துக் கொண்டும்
இலைத்துக் கொண்டும்
கடித்துக் கொண்டும்
வரும் கூட்டம்
கண்ணிலே பட்டுவிட்டால்
கடுகதியாய்த் தோணி செல்லும்
வளைந்து கரை சேர்க்க

தண்டுகளோ தடதடவென
விழுந்து கேட்கும்
தண்டயலும் தன்சவளைத்
தொடுத்துக் கொண்டுபோவான்
தோணியைக் கொல்லாவோடு
குறிவைத்த இடத்திற்கே
குறித்த நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்துகளோ பந்துகள் போல்
பாய்ந்து விளையாடும்
மார்புக்கு முன்னாலே இவைகள்
மகிழ்ந்து ஓடும்

மம்மக்காயன் வலையையெல்லாம்
மல்லுக்கட்டி இறக்கி
மடிவலையை ஏறிநின்று காலாலுதைத்து
மன்றாடிக் கேட்பான்
தண்டுகளை வலிக்கத் தாங்களென்று
தரைசேரும் வரையங்கு தவித்துக் கிடப்பான்

மீன்கூட்டம் மீண்டுமங்கு
மேல்நோக்கிச் செல்ல
மெல்லவாக மடக்கியங்கு
கரைக்கு விடுவான்

தண்டுக்காரன் தண்டுகளை
இழுத்து வைத்து
தளாரென்று குதிப்பான்
கரைக்குப் போக

கொண்டுபோன கயிறினைக்
கொண்டாடிக் கொண்டாடி
வென்றுவிட்டோம் என்றெண்ணி
விரைவாய் இழுப்பர்

கூட்டமாகக் குலாவுகின்ற
மீனைக் கலைக்கக்
குரக்காட்டிச் சுழியோட
அழைப்பான் வலைக்கு

சுழியோடி அடித்துக்கலைக்க
வெடிபோலக்கேட்குமது (கடலுக்குள்ளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறி மீனெல்லாமெழும்பி
ஒருதிசைமாறி ஓடத்தொடங்கும்

வலையாலே வளைத்துள்ள
மீன்கள் எல்லாம்
படையாக மடியிலே
கடைசியில் சேரும்

மடிதாங்கி அங்கே
பிடியாகப் பிடித்திருக்க
மல்லுக்கட்டி மீனையள்ளித்
தள்ளிக்கொண்டு குவிப்பார்

பாரையெல்லாம் படபடவென்று
பார்த்துத் துடிக்கும்
பக்கத்தில் நின்றால்நமக்கு
மண்ணும் பறக்கும்

மடி கிடி வெடித்தாலன்று
மல்லுக்கட்டிச் சுமப்பார்கள்
மாராப்பாய் எம்மவர்கள்

மணமெழும்பும் மாலைநேரம் ஊரெல்லாம்
கறி பொரியலென்று
களிப்பார்கள் கரைசேர்ந்து
நடையொன்று போட்டுத் தவறணை சென்று
நடைமாறி வருவார்கள் சிலபேர்கள்

கடற்கரைக் கிராமத்தில் பிறந்தாலே
களித்திடலாம் நாட்களையே
சுவைத்திட மீனும் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழுந்த மாம்பழம்

கொத்துக்குள் உள்ள மாங்காயில்
பூத்திருக்கும் சாம்பல் மேலாய்
மத்த மாங்காயெல்லாம்
நெட்டி காய்ந்திருக்கும்

சுற்றி வளைத்துக் காயைச்
சுற்றித் திரியும் முசுறு
தட்டிக் கிட்டிப் பார்த்தால்
நெட்டி காய்ந்த தெல்லாம்
நிலத்தை நோக்கி வீழும்

அணிலும் கத்தித் திரியும்
அண்டங் காக்கையோடு
வெயிலும் நன்றாய் இருந்தால்
விழுந்து கிடக்கும் தானாய்

விழுந்த பழத்தை யெடுத்து
விரைந்து மண்ணைக் களத்தித்
தனியே கொண்டு சென்று
புதினம் பார்த்துத் தின்பேன்

கறுத்தக் கொழும்பான் பழத்தை
அறுத்தால் நன்றாய்த் தெரியும்
மரத்தால் விழுந்த தென்றால்
மஞ்சள் பாணி கக்கும்

மரத்தால் விழுந்த பழத்தை
மனிதன் காண முடியா
மருந்து அடித்த பழமே
விரும்பி உண்ண இனிமேல்

மணத்தைக் கொண்டு அறியும்
(நல்) குணத்தைக் கொண்ட பழங்கள்
நலத்தை நமக்குக் கொடுத்து
நல்வாழ்வை எமக்குத் தருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாத்திப்பயிர்

பசுமாடு பட்டிகட்டிப்
பாலும் கறந்துபோட்டு
எருவைக் கலைத்தால்
எனக்கங்கு வேலையில்லை

சூரி அள்ளப் போகவேணும்
சுங்கான் மடுவுக்குள்ள
கரியாகத்தான் தெரியும்
காச்சட்டைக்குக் கீழ

இறைக்கின்ற தண்ணீருக்கு
இடையில் சூரிகலந்தால்
நடையில் வாறதண்ணீர்
நல்லாப் பாயுமங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திக்குள் பார்த்தால்
சேத்துத் தண்ணியில்
பூச்சி புழுவெல்லாம்
சேர்ந்துவரும் மேலே

அதைப் பார்த்திருந்து கொத்த வரும்
காத்திருக்கும் மைனா

வழுதிலையும் வத்தகையும் வாழ்த்தும்
வெள்ளரியும்கூட வெடித்துச் சிரிக்கும்
கொச்சியும்கூட கூடிக் கதைக்கும்
மத்தப்பயிரும் மகிழ்ச்சியாய் இருக்கும்

நீலாவணையில் தோட்டம்
நெடுகிலும் உண்டு
நேர்த்தியாகச் செய்பவர்
பலரும் உண்டு

பாத்திகளில் பயிர்செய்யும்
முறையே அங்கு
பார்த்து அறியலாம்
நீங்களங்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிஅமாவாசைத் தீர்த்தம்

அப்பாவுக்கு ஆடவென்று
ஆடியிலே திகதிகண்டு
அதைக் குறித்தேன்
ஆங்கிலமாத ஆவணி எட்டில்
அன்றிலிருந்து கனவுகண்டேன்
ஆடிற அந்த ஆனந்தத்தை

அப்பனுக்கு நான்செய்யும்
அரியகடன் இதுதானே
செத்துப்போகும் வரைக்கும்
செவ்வனே பார்த்த
அற்புத தெய்வமவரே

பெற்றகடன் செய்யாத
எத்தனை பேரைப்பார்த்திருக்கன்
பேய்போல உழைப்பான்
பிரயோசனம் ஒன்றுமில்லை
நாய்போல வீட்டில்
நடத்துவார்கள் எல்லோரும்

தான தருமம் செய்து
தட்சணை கொடுத்தங்கு
தர்ப்பையைப் போட்டுக்கொண்டு
தண்ணிக்குள் தலைமுழுக
தந்திடும் ஆனந்தம்
அழகு ஆகா
எத்தனையோ அங்கிருக்கும்
இத்தனைக்கும் அவனழைப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிமுடிய அமாவாசைசேர்ந்திருக்கும்
அன்னதான அழைப்புக்களும்
அங்கு எமக்கிருக்கும்
கூடிச்சாப்பிட்டுக் குதூகலிக்கும்
ஆடி அமாவாசை
அன்றுதானே எங்களுக்கு

முற்றிட்டு கொரோனாவென்று
மூடிவிட்டார் தீர்த்தங்களை
செத்தவர் பிதிர்க்கடனும்
செய்யவில்லை இன்று
மொத்தமாய் நாமழிவதற்கோ?

செத்தாலும் சீவன் சாகாது என்று
எத்தனையோ பேர் சொல்லக் கேட்டோம்
அப்போ,
பெற்றவன் கடமையைப்
பிதிர்க் கடனாய்ச் செய்யாது
பேயாய்ப் பிறந்தா செய்வது அவற்றை?

கன்னியாவில் என்கடன் கழிக்கக்
காலையிலே போய்விடுவேன்
கத்தரிக்காய் காய்கறிகள்
வாங்கி வைத்துள்ளேன்
பச்சரிசி தேங்காய்
பாதையில் வாங்கிடுவேன்
தட்சணை கொடுத்து தர்ப்பையைப் போட்டுத்
தலையிலே தண்ணியை வார்ப்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரகடல்

கருமேக மெழும்பிக்
கடலுக்குள் இடிமுழங்கும்
காற்றும் வீசிக்
கடல்மண்ணை நமக்கெறியும்

பூத்துவரும் மண் மேனியிலே
பொலிவாக அது இருக்கும்
போராடி மழைத்துளிகள் மண்ணைக்
குழிதோண்டிப் பழி வாங்கும்

பேராழி அலையெல்லாம்
பெருகிவரும் கரைநோக்கி
பெருவழியாய் இருப்பதுபோல்
ஒருவழியாய் வாங்கல்வரும்

கலக்கெழுப்பிக் கடல்நீர்
குழப்பத்தில் அதுகிடக்கும்
சுழிகளும் சேர்ந்துவரும்
சுருட்டி எடுப்பதற்கு

அழிவுகள்நடக்கும் அலவாக்கரையினிலே
குறுக்காக அலையெழுப்பிக்
குத்தி மண்ணைக்
குவிக்கும் வேறிடத்தில்

அலவாக் கரையங்கு
அமளி துமளியாயிருக்க
அள்ளுப்பட்டோடித் தள்ளித்
தோணிகளைத் தரைக்கிழுப்பார்கள்

எள்ளி நகையாடும்
எங்கள் கடற்கரையைச்
சொல்லிப் புரியவைக்க
சொற்களில்லை முடிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூர்வீகச்சொத்து

*பெண்டாட்டி கொண்டுவந்த*
*பூர்வீகச் சொத்தெல்லாம்*
*புழுதி பிடித்துப்*
*பூட்டிக் கிடக்கிறது*
*கண்டாலும் அருவருப்பு*
*காணேலா இலேசாய்*

*அம்மி குளவி அரிக்குமணை அரிவாள்மணை*
*அரிதட்டு ஆட்டுக்கல் உரல் உலக்கை*
*திருகை திருவலை வட்டா வட்டி*
*தாச்சி படிக்கம் சேவரக்கால் பாக்குவெட்டியென*
*ஒருகும்பமவை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டுநாளாய்ச் சுமந்து அதைக்
கொண்டு வந்தாள் வீட்டுக்கு
சின்னமகள் சிரித்து அதை
எண்ணி எல்லாம் பார்ப்பதுண்டு

இரவு சரிசாமம் எழுப்புமென்னை எலிகள்
ஏராளம் கூடுகளும் எத்தனையோ பாழிகளும்

கடுவன் வந்து கணக்குப் பார்க்க
நடுக்கும் எனக்குச் சத்தம் கேட்க
படுக்கை யெல்லாம் வெறுத்து எனக்குப்
படபட வென நெஞ்சு அடிக்கும்

வருஷக் கடைசி வந்தால்
இருட்டில் கிடந்த எல்லாம்
விரசிவிட்டு எலியை
எடுத்து வெளியில் வைத்து
புளிகள் போட்டு உரஞ்சி
கழுவி வைப்போம் நன்றாய்
இந்தப்பொருள் எதுவும் இப்பவேணாம் என்றால்
அந்த இடத்திலிருந்து அவளும் நடப்பாளெங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருவிக்குஞ்சு

வெட்டு முடிந்த
ஒட்டுத் தாளை
ஒன்றாய்ச் சேர்த்துக்
கட்டிவைக்கும் காதல்கூடு

தொப்பிக் குருவியை வயலில்
எட்டி நின்று பார்க்கத்
தட்டந் தனியே நானும்
சத்தம் ஏதும் இன்றிக்
கிட்ட வாக அதற்குக்
கட்டு வழியே நடப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டுத் தண்ணி கிடந்த இடங்கள்
ஒட்டிக் கொள்ளும் எனது காலில்
சப்புத் தண்ணீர் கண்டு நானும்
சுத்தம் செய்து செல்வேன் அங்கு

தொப்பிக்குருவிக் கூட்டுக் கருகில்
தோழியோடு நித்தம் திரியும்
பொட்டுமுட்டை இட்டு இருக்கும்
பொரிக்கும் வரைக்கும் அடையும்படுக்கும்

பொரித்த முட்டைக் கூடும் இருக்கும்
இறைச்சிக் குஞ்சி அதுக்குள் இருக்கும்
எடுத்து அதைப் பார்க்கும் போது
வருத்தப் பட்டுக் குருவி கத்தும்

பஞ்சு போல இறகு ஒட்டி
குஞ்சின் மேலே பரவி இருக்கும்
ஐந்து ஆறு நாளாய் நானும்
அதையே பார்த்து அலைந்து திரிவேன்

சுருக்குவைத்துப் பிடித்து அதனை
இறக்கை வெட்டி வளர்த்திடுவேன்
முழுக்கவது வளர்ந்திருக்கப்
பறக்கவிட்டுப் பார்த்திருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தூண்டில் மீன்

விண்ணாங்குக் கம்புவெட்டி
வெயிலில் காயவைத்து
கண்ணடைகள் சீவியதைக்
காணாமல் ஒழித்துவைப்பேன்

நுண்ணியமாய் நூல்கட்டி
நுட்பமாக ஈயங்கட்டி
மப்பிலிக்கு மயிலிறகுகட்டி
மாதம்வரக் காத்திருப்பேன்

சித்திரை லீவுக்குள்ளே
சேர்த்த சில்லறையை
சித்தர்ர கடையிலே
மப்பிலிக்காய் செலவழிப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கூசி தூண்டில்முள்ளு
தங்கவேல் சீனியப்பன்
எங்கென்றாலும் எடுத்து
எனக்குத் தருவாரு

முந்திரித் தோட்டத்திலே
முசித்துமுட்டை கலைத்துவந்து
முடிச்சில் கட்டியதை
வெளிக்கிடுவேன் தூண்டிலுக்கு

இடுப்பளவுத் தண்ணியிலே
இறங்கி நானங்கு
உடுப்புக் கழற்றி
உற்சாகமாய் நானிருப்பேன்

தொட்டம் கலைத்துத்
தொகையாய் இரைபோட
வட்டம்போட்டு வாலாட்டி
வளக்வளக் கென்று
முத்தம் கொடுத்து
முன்பின்னாய் வருமங்கு
குத்திப்போடும் இரையைக்
கொண்டுபோய் உண்ண

கத்திப்பாடாய் மீனும்
கடித்து உண்ணும் காட்சி
கொத்துதென்று சொல்வார்
குறிவைப்பார் மப்பிலியில்

பாலாமை சிலநேரம் பார்த்திருக்கும்
பதறிவந்து இரையைப் பறித்துண்ணும்
சேராத வினையெல்லாம் சேருமங்கு
செடிநாறும் அருகிலே சிக்கெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்து வெட்டுகையில்
இரையிருக்கும் மீனுக்குள்
களத்தியெடுப்பேன் கறிக்குக்
களிப்புடன் நாளும்போகும்

விரால்மீன் பட்டால்
விழாதான் வீட்டில்

உரித் தறுத்தெடுத்து
உப்பு நன்கிட்டு
அரைத்துப் பழத்தேங்காய்
ஆக்குவார் குழம்பு

வறுத்த குழம்பது
வாய்க்குநல்ல ருசியது
தடித்த எண்ணெயும்
தலைப்பாலில் எழும்பிவரும்

தூண்டில் மீனையெல்லாம்
துடிக்கத்துடிக்க வெட்டி
குண்டான் சட்டியில்
குலுக்கிச் சமைத்தெடுத்துத்

தின்றால் தெரியும்
தேடித் திரிவாய்
கண்டால் விடமாட்டாய்
கறிவாங்கி சமைத்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருக்கு

பெரும்மழைக்குக் குளம்நிரம்பி
மடைதிறக்கும் வெள்ளம்
வழிதிறக்க மண்ணுடைத்து
வாய்க்காலுள் துள்ளும்

குடியிருப்புக் காணவது
குறிவைத்து ஏறி
குதூகலித்துச் சத்தமிட்டுக்
கூக்குரலும் போடும்

குறட்டை பனையான்
குத்தும் சுங்கான்
அடுத்தடுத்து ஐரல் விரால்
அழகான கச்சலென
ஆட்டித் தலைவாலை
அசைந்தங்கு ஆர்ப்பரிக்கும்

ஒட்டியுரசி ஒவ்வொன்றாய்க்கடித்துக்
குத்திப்பாய்ந்து கும்மாளம்போடுவதைக்
கூடிநின்று பார்க்கையிலே
கொள்ளைகொள்ளும் எம்மனது

செட்டை விரிந்திருக்கும்
செப்பட்டை திறந்திருக்கும்
தட்டை வயிற்றுமீன்
தரையோடு உரஞ்சிநிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டைபோடும் மீன்
முளிசிக் கொண்டிருக்கும்
அட்டையும் அங்கு
அதனோடு ஆடிவரும்

தொட்டம் தொட்டமாகத்
தொட்டிக்குள் அசைவதுபோல்
வட்டம்போட்டு வாலாட்டி
வசந்தத்தை அனுபவிக்கும்

வாய்க்காலில் தண்ணீர்
வளவளவென சத்தமிட்டு
போர்க்காலச் சூழலைப்போல்
புதுப்புது ஒலியெழுப்பும்

பார்க்காத புல்லுகளும்
பளபளவென்ற சல்லுகளும்
மூக்காலே மூச்செடுக்கும்
முதலைகளும் ஆங்காங்கே

பனையான் நடக்கும்
கணையான் ஒழிக்கும்
சுங்கான் சுழிக்கும்
அதைக் காண
கண்ணெல்லாம் களிக்கும்

ஆத்து வாழையெல்லாம்
அவிந்து வரும்
அதுசேர்ந்த சேத்துக்கூழும்
கூத்துப் போடும்

பார்த்தால் பரவசமே
பலருக்கிது புரியாது
ஊருக்குச் செல்வதில்தான்
உவகைகொள்ளும் என்மனதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சண்டைக்காரி**

பெரிய கொண்டைக்காரி
பேர்போன சண்டைக்காரி
விடிய முதலெழும்பி
விறுவிறென்று நடந்திடுவாள்

வெறும் வயிற்றினிலும்
வீயரொன்றை அடித்திடுவாள்
வித்தகர்போல் எவர்க்கும்
தத்துவம் உரைத்திடுவாள்

கொடியைக் காட்டிக்
கூடையைக் கையில்கொண்டு
நடையாய்ப் போவாள்
நான்நின்று பார்ப்பதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட முகம்
வடிவான பல்லு
தட்டை மூக்கு
சொட்டுக் கறுப்பு
சொக்கிலொரு சின்னக்குழி

எட்டத்தான் கால்வைப்பாள்
ஏறெடுத்து எனைப்பார்ப்பாள்
சொட்டும் பயமில்லை
சொல்லுக்கில்லுக் கேட்பதில்லை

வெத்திலை போட்டு
வேலியோரம் துப்பிடுவாள்
கட்டைச் சட்டைதான்
காலிறுக்கப் போட்டிருப்பாள்

சட்டை வெட்டி
சகலதும் காட்டிடுவாள்
விட்டுக்கொடுக்க மாட்டாள்
வீராப்புப் பேசிடுவாள்

கட்டுப்பல்லுஒன்று அதைக்
கதைக்கப்போக மதிக்கலாம்
காரொன்று வைத்திருக்காள்
கடிநாயும் ஒன்றுண்டு
வீடு ரெண்டு
காடுபத்திக் கிடக்கு

கழுத்தில் போட்டிருப்பாள்
கால்கிலோ அதுஇருக்கும்
வெளிக்கிட்டுப் போனாளென்றால்
வெள்ளைக்காரி போலத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டோடு தொங்கட்டான்
தொடர்புக்கு இருகைபேசி
மூக்கோடு மின்னி
முழுதாயது அமர்ந்திருக்கும்

டார்க்கான உடுப்புத்தான்
டசின் கணக்கில் அவளுக்கு
நோக்காதார்கூட நோக்குவாரவளை
நொட்டைக்கதைபல பேசிடுவார்

புருஷனை விட்டிருக்காள்
புதிதாய்த்தான் மணம்முடித்தாள்
விடியவிடிய ஏசி
விரட்டியும் விட்டிடுவாள்

சோறு ஆக்கமாட்டாள்
சொல்லிக்கொள்ள மாட்டாள்
சோறும் கடையில்தான்
சொல்ல வெட்கம்தான்

நாட்டு நடப்பெல்லாம்
நாளாந்தம் கேட்டிடுவாள்
கார்ட்டில் காசெடுத்து
வீட்டுக்குச் செலவழிப்பாள்

ரெண்டு பிள்ளையுண்டு
சண்டையங்கே தினமும்
மண்டையுடைந்த கதையும்
மறைந்து கிடக்கிப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொந்த கொக்கு

வட்டைக்குள் இறங்கி
வடிச்சலைப் பார்த்துவிட்டு
வக்கடைகள் கட்டி
வாய்க்காலைப் பார்த்திருந்தேன்

வாய்க்காலில் தண்ணியில்லை
வரண்ட சுரியிடையே
வற்றாத பள்ளங்களில்
கொக்காலே சித்திரங்கள்

ஒற்றைக் காலால்
ஓவியம் வரைந்து
ஒத்திகையும் பார்த்து
ஓடிச் சென்றிருக்கும்

செத்த சிலமீன்கள்
செதிலிழந்து காணக்
கத்தை கத்தையாகக்
காகம் களிப்புடனே
முத்தம் கொடுப்பதுபோல் முழுமூச்சாய்க்
கொத்தியுண்கிறதே கண்ணினையே

பற்றைகள் படர்ந்திருக்க
பயப்பட்ட நானங்கு
உற்றதனுள் நோக்க
ஒழிந்திருந்த நாய்க்குட்டி
கத்திக்குளறி என்
காலுக்குள் வருகிறதே
பசியோடு கிடப்பதனைப்
பார்த்திருக்க முடியவில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் விளைந்திருக்கு வர்ணஜாலந்தான்
பச்சை மஞ்சளென்று பார்க்கவங்கு
அயல் போலத்தான் அக்கண்டம்
சுயமாய் விளையும் சுந்தரப் பூமி

சரம்சரமான குலையோடு
சருகுகள் உரைய
சரசரவென ஒருசத்தம்
சந்தமின்றி இசைக்குமங்கு

தண்ணிப் பாய்ச்சறகாணி
தரமான விளைச்சலது
பொன்னி நெல்லு
ஒருபோகத்திலும் விளையவில்லை

கதிரில் காய்களும் பழங்களும்
கலவனும் பாலுடன் நிறைந்திருக்க
கறுப்பானும் நிறமாகிக் காய்ந்து
அரிதாக அதுவங்கு கிடந்திடுமே

ஆதவனின் செங்கதிர்கள்
அம்மணியில் படும்போது
சிரிப்பொன்று எழுவதை
சிட்டுக்குருவி எப்படியறிந்தது

தொட்டம் தொட்டமாக
வட்டைக்குள்ளடியில்
கட்டுப்படுத்தாத அறக்கொட்டியான்
கண்டு மெட்டிசைத்ததே

கொக்கு மட்டும் வந்து குந்தியிருந்தங்கு
வக்கடை வாய்க்காலைப் பார்த்து
வந்தவழி சென்றதே நொந்துபோன கொக்கு
வந்திடாதோ பிறகு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனங்காய் பாணி

பனங்காய் விழும்
படுத்திருப்பேனறியாது
எடுக்கவென எழும்ப
அன்னை,
ஏசுவாள் பேயென்று

நடுங்கும் எனக்கு
நள்ளிரவில் பேயென்றால்
அடங்கிக் கிடப்பேன்
அதைநான் எடுக்குமட்டும்

செல்லத்தங்க மூத்தம்மாட
சிவத்ததோல்ப் பழங்கள்
சொல்லத் தேவையில்லை ருசியை
நல்லவிருப்பம் அது எனக்கு

பாழ்வளவு பற்றைக்காடு
சுற்றிப் பார்த்தெடுத்து
சுமந்து செல்வேன்
வீட்டுக்கு அதை

தேத்தண்ணி அடுப்பில்
திகுதிகென்று தணலிருக்கும்
பாடைப் பார்த்துப்
பழத்தைச் சுடுவாவம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலைக் கழற்றி
வேளைக்குப் பிழிந்து
பாலை ஊற்றிப்
பழஞ்சோற்றை அதில்வைத்து
கூழாய்ப் பிசைந்து
கொஞ்சம்போல் சீனியிட்டு
வேளைக்கு உண்ணுவது
விருந்துதான் அதுஎனக்கு

களுவாஞ்சிக்குடி கடைகளுக்கு முன்னாக
இடையிடையே ஆட்கள் நின்று
ஈக்கிலில் கோர்த்த
பனம்பாணிப் பலகாரம்
பலநாளாய் விற்குதங்கே

பச்சரிசி மாவில்
பாணி சேர்த்து
வண்டுக்குள் வைத்தவிக்கும்
வரிக் கொழுக்கட்டை
உண்டாலும் உவகையே

பாணி பிழிந்தெடுத்து
பனையோலையில் காயவைத்து
பனாட்டு ஒடியலென
எத்தனையோ வகை
பலவகையும் சுவைதானே

இப்போதைய சந்ததிக்கு
இவையொன்றும் தெரியாது
சத்தான உணவாக
எத்தனையோ இயற்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காட்டு வெள்ளம்

*கானகம் விண்பார்க்கும்*
*கதிரவன் ஒளியிழப்பான்*
*கருமேகம் உருவாகி*
*கடல்நின்று வெளிவருவான்*

*கோர்த்தெடுத்த மேகத்தினைக்*
*கொண்டுவரும் காற்றானும்*
*போர்தொடுத்து விளையாட*
*தேர்ந்தெடுக்கும் கணைகளையே*

*கணைகள் மோதவங்கு*
*காரிருள் விரைந்துசென்று*
*பெருமழை பொழியவங்கு*
*பெண்ணவள் மகிழ்வாள்கண்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணங்கு அசைந்தாடும்
ஆனந்தமாய் உறவுகொள்ளும்
ஆர்ப்பரித்து என்மனம்
ஆசைகொண்டு நோக்குமதை

மயில்கள் ஆடக் காண்பேன்
மலைகள் சிரிக்கக் கேட்பேன்
மாடுகள் ஓடுகையில் நான்
மதங்கொண்ட யானை பார்ப்பேன்

கலைகளின் கூட்டம் பார்த்து
காடுகள் நடக்கக் காண்பேன்
கதிரவன் மறைந்து அங்கு
மதியவனின் மயக்கம் பார்ப்பேன்

சீறிப்பாயும் நீரைக் கண்டு
சிங்கார நடையைப் பார்ப்பேன்
ஓடி உறவாட ஒழித்திருக்கும்
ஓரினக் குளமும் காண்பேன்

ஆடி அசைந்து
ஆத்துவாயைப் பார்த்து
ஆசையோடது ஆழிபாயும்
அழகைப் பார்ப்பேன்

மாசற்ற கடலினிலே
மகிழ்ந்து விளையாடவென்று
ஓடிவரும் நீரெல்லாம்
வேஷம் மாறிய
வெள்ளமெனப் பெயர்கொண்ட
போகம் விளைச்சல்தரும்
எங்கள் வீட்டுத்தண்ணீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்ன மல்லிகை

காலையிலே கண்விழித்து
கதவோரம்நான் நிற்கையிலே
கண்டுவிட்டால் என்னையவள்
கையசைத்து அழைக்கக்காண்பேன்

சின்ன மல்லிகைகள்
செழுமையாய் அங்கு
எண்ணம்போலத் தான்
எழும்பி வளர்கிறது

என்னதவம் செய்ததோ
சொன்னமாதிரி தண்ணி
எண்ணும்போது அதுக்கங்கு
ஏறியல்லோ போகிறதே

தண்ணி அடிக்கையில்
கன்னிப்பூக்கள் என்னைப்பார்த்து
கண்ணைச் சிமிட்டும்
காட்சியென்னை மறக்கிறது

நேற்றுப் பூத்தவை நிலத்தில் கிடக்க
இன்று பூத்தது இனிதே சிரிக்கும்
காலம் வரும்போது பூக்க இருக்கும்
கன்னிக் கும்பல் களிப்பில் கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பூவுக்குக் கொள்ளையாசை
விருந்து கொடுக்கும் தேனிக்கங்கு
பறந்து வருபவை உரசிக்கொண்டால்
மறந்து கிடக்கும் மதுரங்கொடுக்க

சரிந்த கந்துகள் விரிந்து கிடக்கும்
சரசர என்று சத்தமும் எழும்பும்
முசுறுகள் முறையாக ஏறி இறங்கும்
முழுநாளும் அது துக்கத்திலங்கு

நிலமகள் கொடுக்கும் நித்திய பூசையால்
நீண்டு வளருது பக்கத்து மரமும்
ஆண்டு தள்ளுது அந்த இடத்தை
காண்டாவனத்துக்கது கதையொன்றும் சொல்லும்

பூண்டுகள் புதர்கள் அண்டையில் இல்லை
வேண்டுவோர் வந்து கொண்டைக்கும் பறிப்பர்
வேளைக்கு வந்தால் பூசைக்கும் ஆயலாம்
யாருக்கும் இதனால் துன்பமும் இல்லை

சேதப்படுத்த மாடுகளில்லை
சேதனப்பசளைகள் ஏராளமங்கு
பாதகஞ்செய்யும் ஆட்களுமில்லை
பாதுகாப்பாய் வளருது அங்கு

காலை நேரம் கலகலக்கவொலி
மேலுங் கீழும் மினுமினுக்கவுடல்
ஆசையோடு அமரத்தவித்திடத் தேனீ
காலை வைத்துக் களிப்போடு உண்ணுமே

சிரித்து மகிழ்ந்த சின்ன மல்லிகை
விரித்து இதழால் வாழ்த்துச் சொல்ல
பொறுத்துக்கொள் நான்வருவேன் என
போகும்போது தேனீ சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊர்க்கடன்**

கடன்வாங்க நடையாக
இடங்கண்டு வந்து
படங்காட்டிப் பம்மாத்தாய்
பாசம்பொழிவார் நம்மவர்கள்

எங்குமேயெனக்கு இதுவரை இல்லையென
வங்குரோத்தை சொல்லாது வாயால்
தந்திரமாய் மந்திரம்போலோதி (மாற்றியமை)
பங்கம்புரிந்து பரிதவிக்கச் செய்திடுவாள்

பொன்மொழியால் தன்புகழைப் புகழ்ந்தும்
எம்மாத்திரம் ஏழைகளுக்கு இரங்குவதென்றும்
நம்பாமல் நம்பவைத்து எம்மை
நடத்திடுவாள் விளையாடல் ஒன்று

ஏமாத்து வேலைகள்
எவ்வளவு உண்டென்று
ஏமாந்த பிறகுதான்
ஆராய்ச்சி செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்சிரிப்பு புறங்கூறல் போலி வேஷம்
புருஷனுடன் உறவில்லை என்று முழக்கம்
தந்திரமாய் வாழ்க்கையினைத் தானே நடத்தும்
தரங்கெட்ட பெண்ணாகத் தரணியில் இவர்கள்

கொடி போட்டும்
கூந்தலுக்கு மாலையிட்டும்
வெடிபோட்டு வேதாந்தம்பேசி
கடைபோட்டுக் கதைசொல்வாள் நமக்கு

இத்தனைக்கும் நான்
எவரிடமும் ஏமாந்ததில்லை
அப்படி யிருக்கையிலே
அசத்திவிட்டாள் வாயாலே

பொலிசுக்கு என்று சொன்னால்
போங்களென்பாள்
பிறகு என்ன?
செய்வதை நீ செய் -
என்றும் சொல்வாள்

ஏமாற்றம்பெற்று நாம்
கடனைக் கேட்டால்
இடிமுழக்கமாகி அங்கு
வெள்ளம் நிற்கும்

இப்படிப்பட்ட செயல்கள் தானே
எவருக்குங் கொடுக்க
மனம் சிலருக்கு
வருவதே யில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி

விடியலென்பது வெளிச்சத்திலில்லை
வெளிச்சமென்பது விடியலிலில்லை
ஆட்டிப்படைக்கும் ஆணவமழிந்திட
விடியலெமக்கு வெளிச்சமாகுமே.
அசுரர் தேவரை அழிப்பதேயென்று
முடிவை மறைக்கு எதிராயெடுத்து
முரணாய் எடுத்த முடிவுகளால்தான்
முடிந்தானசுரன் முரளிதரனால்
தேவர்களிரந்து தெய்வத்தை வேண்டிட
பாதகம் செய்த பாதகன் அழிந்து
தீயவை நீக்கி தர்மம் காக்க
தேவகிவயிற்றில் மாதவனுதித்தான்
அசுரனைக்கொன்ற அன்றைய தினமே
அகிலம் முழுவதும் இருளும் நீங்க
அரக்கனும் இரங்கி அன்றைய தினத்தை
அடியார் நலன்பெற வரமொன்றும் கேட்டான்
எண்ணைகள் தடவி எண்ணங்கள் வளர்த்து
அரப்புகள்வைத்து அழுக்காறு நீக்கி
விளக்குகளேற்றி வெளிச்சத்தை கூட்டி
மனிதனில் ஆணவம் மறையும் போதே
மனதினில் ஒளிரும் ஒளியே தீபாவளி
வீட்டிலிருந்து விளக்குகளேற்றி
நாட்டிற்கு நல்ல வரங்களை வேண்டி
நாமொரு நாளினை நன்றாய் களிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடங்காய்**

*தானாய் வீடுவந்து தழைவிட்டு மரமேறி*
*நாளாய்நான் பார்த்திருக்க நடைபோட்டு மதில்பாய்ந்து*
*கூடாக வளர்ந்தின்று கூரை முடிவைத்து*
*பாடாய்ப் படுத்துறங்கும் பாவையவள் என்வீட்டில்*

*குட்டியிட்டுக் குஞ்சுவைத்து*
*என்கொட்டிலையும் குளிரவைத்து*
*நான் முட்டியாலே தண்ணீர்விட*
*அது நெட்டியாலே பால் கொடுக்கும்*

*சட்டி செல்லும்வரை சாகாது பார்த்துவிட்டால்*
*ஒட்டிக் கிடந்து ஒவ்வொன்றாய் ஓடிவரும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டியெடுக்க வேதனைதான் முழுநாளும்
நட்டுவளர்த்தால் தானே நான் சொல்லிப்புரிவதற்கு
வீட்டுக்கூரையில் விழுந்துபடுக்க
விருப்பமதற்கு எனக்குத்தெரியும்

வாட்டும் வெயிலில் வதங்கிக் கிடக்க
வருத்தமெனக்கு அதற்குப்புரியும்

மாட்டுச்சாணி போட்டதற்கு
வீட்டுக்காரி விருந்துவைப்பாள்
நாட்டுமரக்கறி சமைக்கவென்று
நாளைக்கூடக் குறித்துவைப்பாள்

பொன்னர் வருவார் புன்சிரிப்புடனே
புரட்டிப்பார்த்து அழகை ரசிப்பார்
அண்ணேயென்ன என்று கேட்டால்
அறுக்கச்சொல்லிக் கதையை முடிப்பார்

வெண்ணை திரளும் நாடங் காய்கள்
விளையும் நன்றாய் எங்களூரில்
பண்ணாய்ச் சமைத்துப் பால்க்கறி வைக்கும்
பழக்க முண்டு நீலாவணையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**காலைவேளை**

சுருண்டு படுத்த சூரிய னெழுந்து
விரிந்த பூக்களில் விளையாட வென்று
வேலிக் குள்ளாள் விடுகுது கண்ணை

உதிர்ந்த பூக்களும் ஒவ்வொன்றாய்ப் பார்க்க
பூக்களின் அழகில் பூரித்த குடிகாரவண்டு
நாக்கினை நீட்டி நாடகமாடி
போக்குமாறி வாக்கும்மாறி
போகமுடியாமல் கிடக்க
மரக்கிளை ஓணான் மகிழ்ந்து
சரக்கென்று பிடிக்க
சத்தமின்றி ஓட்டுப்பார்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து மோதிய வண்டுகளில்
வண்ணம்பூசிய வைகறைப் பூக்களை
வாழ்த்திய தருணத்தில்
ஊர்க்கோலம் போகவந்த குருவிகளும்
குடும்பமாய்வந்து பூக்களில்
மூக்குரசி முத்தம் கொடுத்து
காதோரம் கிசுகிசு பேசி
உண்டு களித்து ஊஞ்சலாடுகிறது.

உலர்ந்த சருகுகள் வீசும் காற்றில்
உருண்டு எழுந்து உயிர்ப்படைகிறது
இரண்டு இலைகள் இணைந்து
இறைவணக்கம் செய்வதைப் பார்த்து
இன்புற்று கைதட்டுகிறது காற்று

கதிரவனின் கதிர்பட்ட இடங்கள்
கண்பட்டதுபோல் காய்ந்து கிடக்கின்றது

காற்று மாத்திரம் வேலியில் மோதி
காதுக்குள் எனக்கு கதை சொல்ல
கதையை செவிக் கனுப்பாமல்
சிக்கெடுத்து சிலாகித்துக் கொள்கிறேன்
காற்று நின்றதும் சலனமற்ற சாத்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிரெடுத்தல்

புதிராகக் கதிர்கொண்டு பூசையறையில் கட்டி
உதிராமல் இரையாக உயிர்களுக்குக் கொடுக்க
விதியாலே வருகின்ற வில்லங்கம் நீங்கி
புதிதான வாழ்வங்கு பூப்போல மலரும்

வயல்வெட்ட முன்னமே வழமையுண்டு - ஊரில்
அயல் வீட்டாரையும் அழைத்து
இயல்பாக எல்லோரும் இணைந்தொன்றாய்
இன்புற்று உண்பார்கள் புதிர்சோறு அங்கு

கோவிலிலும் கொடுப்பார்கள் கொண்டு உண்ண
அதைக் காவினிலே கொண்டுசெல்வார் களிப்பாக
மாவினிலும் விதம்விதமாய் பலகாரம் செய்து
மகிழ்வார்கள் மணப்பெண்கள் புதிர்நாளைக்கொண்டாடி

பூசையிலே புத்தரிசி பொங்கியிருக்கும்
பூமாதேவிக்குப் பூரிப்பாய்ப் பூசைநடக்கும்
ஆசைதீரவமுதும் கறியோடு ஆக்கியிருக்கும்
அள்ளித்தின்னப் புதிர்ச்சோறு கையில் ஒட்டிப்பிடிக்கும்

வெட்டுமுடிந்தால் கொட்டியவிப்போம் புதுநெல்லை
கட்டிவைப்போம் சிலசாக்கைக் காலபோகம் வரைக்கும்
அட்டியாக அடுக்கியுள்ள அடுக்கிலிருந்து
கொட்டியளந்து கொடுப்போம் நாம் விதைநெல்லும்

மரைக்காலால் அளப்போம் நாம் மளமளவென்று
அதைக் களைக்காமல் அவிப்போம் காயவைக்க
காயவைத்த நெல்லைவீட்டில் கைக்குத்தாய்க் குத்திக்
கட்டிவைப்போம் கவனமாகக் கல்நெல் வெளியாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு விருந்தாளி

எலியோடு ஏராளம்
உயிருண்டு என்வீட்டில்
பலியெடுத்துப் பசியாறும்
பறவைகளும் சிலவுண்டு

வெளிவராமல் விஷத்தோடு
திரிகின்ற பாம்புண்டு
ஒழித்திருந்து உயிர்வாழும்
ஊர்வனவும் அங்குண்டு

செழிப்பாக இருக்கின்றது
சேர்ந்தும் வளர்கின்றது
மொழிப்பிரச்சனை அதற்கில்லை
மொழிவார்கள் முன்பின்னாய்

தொழில்களிலும் அவ்வாறே
தோற்றுவிட மாட்டார்கள்
அழிபவர்கள் ஆயிரம்
அழிப்பவர்க்குக் கவலையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தில் என்னோடு
எப்போதும் வாழ்பவராய்
என்னுள்ளத்தில் ஒவ்வொன்றும்
எங்கேயோ ஒழிந்திருக்கும்

வள்ளல்போல் நாம்
வாரி வழங்கிடவே
வருடப் பிறப்புகள்
வழியினை வகுக்கிறதே

கோலமிடும் மாவையெல்லாம்
கொண்டுசேர்க்கச் சிறுவாயான்
ஓலமிடும் காக்கைக்குக்
காலையிலே பலவுண்டு

ஊளையிடும் நாய்களுக்கு
வேளைக்கே உணவுண்டு
காளைக்கும் கறவைக்கும்
காத்திருக்கும் புல் நன்கு

மாளயக் காலம்
மண்வாழும் உயிருக்கென்று
ஆலய வேள்வியிலே
ஐம்பூதத்துக் கென்றும்

பாதகம் பண்ணாமல்
பகிர்ந்துண்ணப் படையலென்றும்
வேதங்கள் போதித்த
வியப்பான தத்துவங்கள்
ஊரெல்லாம் மருவி
ஒழிந்துவிடப் போகிறதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கரப்பு**

குளத்துக்குள்ளே கலக்கெழுப்பிக்
குறட்டைபிடித்து விளையாடிக்
கோர்த்தெடுத்துக் கொண்டுவந்து
கொடுப்போமே சமைப்பதற்கு

உரித்தெடுத்து அவற்றையெல்லாம்
உப்புமஞ்சளென இட்டு
வறுத்தகுழம்பு வைத்தங்கு
வாய்க்குருசியாய்த் தருவார்

பொரித்துருசிக்கும் மீனாகப்
பொட்டுச்சள்ளல் பெட்டியான்
சிரித்துமகிழச் சினைமீனாய்க்
கடுக்கக்குத்தும் களிக்கெழுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமிழிவிட்டுக் குழியில்கிடக்கும்
குளத்து மீன்களெல்லாம்
விழிபிதுங்கி விரண்டெழும்
விழுந்தெழும்பும் கரப்பினால்

வழிதெரியா வெளியேற
வளைந்த கரப்புக்குள்ளே
இடிபோட்டு அடித்துடைக்கும் விராலை
முறித்துடைப்பார் எம் கரப்புக்காரர்

அடுப்படிக்குச் சென்றாலும்
அமர்க்களம்தான் அன்று
அரைப்போத்தல் அசைந்தாடி
அமைதிகொள்ளச் செய்யும்

கரையாவெளிக் குளத்தினிலே
கரப்பில் மீன்பிடித்தால்
களிப்போடு கறிவைத்து
சுவைப்போமே வீட்டினிலே

சுங்கான்மடுக் குளமும்
சுதந்திரந்தான் எமக்கு
சங்காரம் செய்வார்கள்
சகதிகிளப்பிப் பிடிக்க

பெரியகுளம் உரிமையுடன்
ஊறிலுண்டு பெரிதாய்
பெருமீன்கள் பலசாதி
உருவாகும் நன்று

வட்டிக்குளம் எப்போதும்
வற்றாத கிடங்கு
சொட்டுத்தண்ணியும் இல்லாமல்
சோர் விழந்ததில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பிவிளக்கு

வழக்கொழிந்த விளக்கையெல்லாம்
வளங்குறைந்தால் புகுத்தவென
துடைத்தெடுத்துத் தூசுதட்ட
மனக்கவலை யெழுகிறது

போத்தலெடுத்துப் பொத்தெடுத்து
மூடியை
சீத்தைத்துணியில் திரியிட்டுப்
பார்த்து எண்ணையிட்டுப்
பற்றவைத்து சோதித்து
பகித்திரமாக நேற்றுமுடித்து
நிம்மதியாய்த் தூங்கிவிட்டேன்

பவர்கட்டென்று பயப்படத்தேவையில்லை
பழையபல்லவியைப் பாதுகாப்பதேவழி
பழக்கதோஷத்தால் விளக்கமேதுமில்லாமல்
குடித்தபுகைக்குக் குறைவில்லை
குடலுக்குள்தானிருந்து கும்மாளமடிக்கிறது

ஒட்டு விறாந்தையிலே
ஓரமாய்க் கிடந்து
குப்பிவிளக்கு வைத்துக்
கொடூரப் பனிக்காற்றில்
கொப்பியை விரித்துப்
பக்கம் பக்கமாய்ப்
பார்த்துப் படித்து
சப்புசப்பென்று சப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே அயர்ந்து
குப்புறப் படுத்துக்
குப்பிவிளக்குத் தட்டுப்பட்டுக்
குளித்து மண்ணெண்ணையால்
தப்பி எண்ணையைத் தலைமுழுதுமிட்டுத்
தடவிப் படுத்ததெல்லாம்
இப்போதும் ஞாபகமே

வெப்பு சாரமாயிருக்கும்
விடிய எழும்புகையில்
மப்படித்தவன் போலும்
மயக்க மெனக்கிருக்கும்

மண்ணெண்ணெய்ப் புகை
கண்ணைச் சிவக்கவைக்கும்
காற்றடித்தால் புகை
காற்றுப்பை சென்றுவிடும்

மூக்குக்குள் சென்று
முக்கித் தவிக்கும்
மூச்சுத் திணறி
முன்பின்னாகி நிற்கும்

முகத்தைப்புகைபோட்டுப்
பழுக்கவைத்திருக்கும்
வெளுத்த வெப்பனைப்போல்
விரைவாய் மாற்றிவிடும்

எடுத்த கருமத்தை
எப்படியும் செய்திடுவோம்
வருத்தம் வேண்டாம்
வாழுவோம் வையகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்காய் பறித்தல்

கொத்து வேலியாலே
கொடுக்குக் கட்டிக்கொண்டு
சத்தங்கித்தம் போடாமல்
சருகுக்கு மேலாக

பத்திப்பதறிப் பகல்வெயிலில்
செத்தாலும் பரவாயில்லையென்று
புத்திபிடிபடாக் காலமதில்
பெத்தாட வளவுக்குள்
முற்றியபழம் பறிக்க
முண்டியடித்துப் போனதெல்லாம்
முட்டாள்தனம்தான்

உத்திகள்வகுத்து ஒழித்திருந்து
ஊருக்குள் தெரியாமலிருக்க
திட்டங்கள்போட்டு சத்தியங்கள்வாங்கி
வித்தகர்போல் அழைப்பார்
விளையாட்டு நண்பன்மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திக்கொண்டுபோய் முத்திரியிலேறி
முசுத்துமுட்டை கலைத்துத்
தட்டித் தண்டுக்காயாய்ந்து
நண்டுபோல்நடந்து நல்லபழமுண்டு
கொண்டுபோகவென கோர்த்தீர்க்கினிலே
கண்டுவிடாமல் கடதாசிபேக்கிலிட்டு
காயும்வெட்டி கருங்காயும்பறித்து
கொட்டைதிருகிக் கொடுக்குக்குள்போட்டுக்
கட்டிக்கொண்டு வந்து
சுட்டுச்சுடுசாம்பலுக்குள் வைத்துத்
தட்டித் தாளிலெடுத்து
சுட்டசூட்டோடு சுவைப்பதை
சொல்லவே வார்த்தையில்லை

பால்பட்டுத் தோல்சுட்டுப்
பார்ப்பதற்கே அருவருக்க
பள்ளிக்குப் போகாது
நானுரித்ததை நன்றாக்கி
நாட்கணக்காய்ப் பார்த்திருக்க
தோலுரிந்து
கால்கையெல்லாம் கறுப்புக்கழர
ஊரறிந்த வெள்ளையனாய்
உள்ளுக்குள் இருக்க
தோலுரிக்கவென காத்திருந்த
தொகையான ஆசிரியர் ஞாபகமே

நான்பிறந்த ஊரினிலே
ஏன்பிறந்தோமென
எண்ணவே தேவையில்லை
வானுயர்ந்த வளங்கள்
வளைந்து கிடப்பதனால்
வளமான வாழ்வுக்கு
வழிவகை அதிகமுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புத்தாண்டு

பண்டிகை நமக்கில்லை
பழையவை எதுவுமில்லை
உண்டிட ஒன்றுமில்லை
உடுக்கவும் எடுக்கவில்லை

பண்டைய மக்கள்போல
பாரினில் வாழ்வோமிங்கு
வண்டியில் செல்லக்கூட
வழிக்கூலி அதிகமிங்கு

வரிசையில் சென்றாலங்கு
வாங்கலாம் பொருளும்நன்று
திருடர்கள் அதிகமிப்போ
தீமையும் பெருகுதிப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையே கூடிச்சென்றால்
வாழ்வதோ கேள்விதானே
தொழில்களும் தேடமுடியா
தொல்லையும் நோயினாலே

வல்லவர் உழைக்கிறார்கள்
வசதியாய்க் களிக்கிறார்கள்
கள்வர்கள் இவர்களாலே
கஷ்டமே நமக்குமிப்போ

கொள்கைகள் ஏதுமில்லை
கொடுத்திட மகிழ்ந்துவாங்கும்
வல்லமை கொண்டோராலே
வறுமையால் வாடுகின்றோம்

பிள்ளைகள் வெளியில்சென்று
பெருமையாய் வாழ்வதற்கும்
கையிலே பணமுமில்லை
கற்பனை அறவேயில்லை

பண்டிகையன்று கூடப்
பால்தேனீர் பருகமுடியா
பெண்களோ எல்லையின்றி
பெருமூச்சு விட்டுக்கொண்டு

அண்டைக்குப் பகிரக்கூட
அடுப்படி அணைந்ததாலோ
மண்டையில் ஒன்றுமேறா
மடந்தையாய்த் திரிகிறாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரத்தை

மோட்டு வட்டைக்குள்
முளையெறிகின்ற நாளன்று
காட்டு வழியால்
கரத்தையிலே சோறுகொண்டு

சேற்றிலே விதைத்தவரை
சோற்றாலே மகிழவைக்கும்
சொல்லொன்று பரத்தையென்று
எம்மூரில் இருக்குதின்றும்

முளைச்சாக்கு முக்காலி
முளையள்ளக் கைப்பெட்டி
அளவெட்ட மண்வெட்டி
அறுகெடுக்கக் குப்பைவாரி
விறுவிறென்று போகும்
விடியமுதல் வயலுக்குள்

குறட்டைக் கருவாடு
உடைத்து எடுப்பார்கள்
குத்தரிசி யெடுத்து
புடைத்து வைப்பார்கள்

பரத்தையை அடுப்பிலே
பார்த்திருக்கச் சமைத்துப்
பாலரின் வண்டிலைப்
பார்த்திருப்பார்கள்

பெட்டியிலே சோறு
சட்டியிலே குழம்பு
முட்டியிலே தயிர்
மூடிக் கட்டியிருக்கும்

வாளியில் கிழங்காணம்
வழுகாது பெட்டிக்குள்
தாள்கள் வைத்துத்
தலைப்பாயுட னிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக் கரத்தையை
ஓரமாய் நிற்பாட்டிப்
பத்திரமாய்த் தூக்கிப்
பாலர் வைத்திடுவார்

கட்டு வழியாலே
கரத்தை ஓடுகையில்
கட்டிவைத்த பெட்டியெல்லாம்
கறிபட்டு மணமெழும்பும்

விட்டு வைக்காத
விரால் பொரியல்
வேறொரு
கதை சொல்லும்

நடக்காத மாட்டை
நடக்கவைப்பார் காலாலே
படுக்காமல் மாட்டை
எழும்பவைப்பார் வாலாலே

குருட்டுக்கண்ணன் குஞ்சித்தம்பி
கொட்டப்பாக்கார் சின்னத்தம்பி
பார்த்துக்கிடப்பார் பரத்தை வரவைப்
பசியைத் தீர்ப்பார் பறந்து பறந்து

கரத்தை கண்டவுடனே
சிரித்துக்கொண்டிறங்கி
குளத்திற்குளித்து வந்து
கரத்தை கொண்டுவந்த
பரத்தையெல்லாம் இறக்கி
ருசித்து உண்டுகளிப்பர்
அப்போ,
சிரித்து நானும் மகிழ்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடச்சமையல்

எரிவாயு அடுப்பென்றால்
எனக்கியலா என்கின்றாள்
எரிப்பதற்கு வாங்கியது
எமனாக உள்ளதிப்போ

கடுப்பினிலே பெண்டாட்டி
கவலையும் அவளுக்கிப்போ
அடுப்பினிலே சமைப்பதற்கு
அவளுக்கு விருப்பமில்லை

கண்ணாடி அடுப்பு
கலகலக்கும் சத்தம்தான்
எந்நாளும் என்வீட்டில்
இரவுக்கனவினிலே

சிலிண்டரெல்லாம் கடையினிலே
சிரித்துப் படுக்கிறது
சில்லறை வியாபாரி
சிந்துகிறான் கண்ணீரை

மண்ணெண்ணை அடுப்பெல்லாம்
மகுடம் சேர்க்கிறது
வெண்ணெய் திரண்டுவர
வெடிக்கிறது மற்றடுப்பு

உண்மை தெரிந்தால்தான்
உலைவைப்பார் உண்மையிலே
உணவெல்லாம் கடையினிலே
ஓடருக்கு வருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுக்குள்தான் ஒன்றுமில்லை
ஒருவாறு சாப்பிடலாம்
உருளைக்கிழங்கு ஒருதுண்டு
உதிர்ந்தமீன் மோதிரம்போல்

பணமெல்லாம் கையிலில்லை
பரவாயில்லையது டொலர்போல
பிணமாக்கி விடுமென்ற
பெரும்பயம் இல்லையிப்போ

குணமாகிவிடாத கூடாதபுண்கள்
பெருமளவில் வருவதாய்
பேட்டி கொடுக்கிறார்கள்
கொரோனாக் காலம்
கொண்டுபோனால் கதைமுடியும்

ஆயுட்காலக் காப்புறுதி
அனைவருக்கும் செய்துவிட்டேன்
அடுப்படிக்கு அருகாக
உடைத்தும் விட்டிருக்கன்

முறைப்படி குழாயை
முந்தானைபோல் சுத்தினாலும்
பெண்டாட்டி என்றாலும்
இதுகாணா என்கின்றாள்

வருடப்பிறப்புக்கு
வானவெடி வாங்கவில்லை
குடும்பக் குவாட்டசிலே
கூடித்தான் இருக்கின்றோம்

விருந்துகளில்லை இங்கு
வெளியேதான் எல்லாம்
விறகுவந்து பட்டால்
வெற்றிதான் பார்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெட்டுக்கூட்டம்

தாள்க்கத்திப் பூக்கொத்தித்
தலைமுடி சவரம்செய்து
கூட்டமாய் வெளிக்கிடும்
குதூகல மினிவருமோ

வெட்டுக்குச் செல்வதை
வேடிக்கையாகச் சொட்டடித்துச்
சொல்லித் திரிவது
சோகத்திலொரு களிப்பு

புலம்பெயர்ந்து போவார்போல்
நலம்விசாரித்து நாளைச்சொல்லித்
தலைபஸ்ஸுக்குத் தவங்கிடப்பார்
தலைமன்னார் செல்வதற்கு

பளை பரந்தனிருந்தெல்லாம்
சுளைசுளையாகப் பறந்துவரக்
களைகட்டு மெங்களூரில்
கடனும் தொடங்கிவிடும்

பணம் நன்றாய்ப்பரிமாறப்
பதமதைப் பார்த்தவர்கள்
பந்தப்பாடாய்த் தூக்கிப்
படுக்க வைத்தவர்கள்
என்றெல்லாம் எத்தனைபேர்
ஏறிச்செல்ல வருவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துலிங்கம் முட்டுக்காயன்
செத்துப்போன சிவலிங்கம்
அத்தனைபேரும் வித்தகரே
வெட்டுக்கட்டு வேலைகளில்

கட்டுவார் கை பை முதல்நாள்
கணக்கான பருவத்துடன்

ஊத்திக்குடித்து உறவாட
ஒரு போத்தலொன்றும்
உப்புக்கருவாடு கொச்சிக்காய்த்தூள்
சமைத்து உண்ணவென்றும்

ஆக்கிச்சாப்பிட அளவாயும்
பாக்குவெத்திலையென்று பலவாயும்
பேக்கில்கட்டிக்காத்துக் கிடப்பார்கள்
கடுகதி வரும்வரைக்கும்

தோளிற்தொங்கும் தாள்க்கத்தி
துணைக்கென ஒருசமையல்காரன்
நாளைக்கடத்த முகாமைக்காரனென்று
நலமே வெளிக்கிடும் கூட்டமாக

வெட்டுமெசின் வந்ததனால்
வீதியிலே சுற்றுங்கூட்டம்
கட்டுக்கட்டாய்க் காசெடுத்த
காலந்தான் இனிவருமோ

வெட்டு முடிய வேறு நினைப்பின்றி
கட்டாகக் கொண்டுவரும் காசு தனைக்
கள்ளுக் குடித்துத் துள்ளிச் செல்லுவதைப்
பள்ளிக் காலத்தில் நான்பார்த்து ரசிப்பதுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலம்

அடைமழையால் அவதியுறும் அன்பரெல்லாம்
அறுவடையை எவ்வாறு முடிப்பாரின்று
கடும்மழையாய் இடைவிடாது பெய்தாலிப்போ
காயவைத்து உலரவைக்க வழிதானென்ன?

தடுமாறி ஓடுகிறான் விவசாயி
பெருவாரி பெறவில்லை விவசாயத்தில்
ஒருவாறு ஒப்பேற்ற வழியிருந்தும்
ஒவ்வொன்றாய்த் தொடர்கிறதே தடைகள்பல

விலைவாசி கூடியிப்போ வீட்டுச்சாமான்
அரைவாசி வாங்கக்கூட முடியாதிப்போ
மலைவாசி போலநாம் வாழ்ந்தால் மட்டும்
மகிழ்வாக வாழலாம் மனைகளின்றி

உலைவைத்துப் பலநாளாய் உண்ணாமலே
ஊரினிலே உள்ளவர்கள் ஏராளம்
பரிதவிக்கும் குடும்பங்களைப் பார்த்தெவரும்
பரிதாபப் படுபவரைக் காணவில்லை

தெருத்தெருவாய் தினக்கூலி தேடி வேலை
தினந்தினமாய் சென்றவனும் திரும்புகிறான் வீடு
மனக்கவலையோடு வந்து மனையில் தங்கி
தனக்குவேலை இல்லையென்று தவிக்கிறானிப்போ

உழைக்கிறவன் உழைக்கின்றான் ஊரைவிற்று
ஒவ்வொன்றாய் இழக்கின்றான் ஊர்க்காரன்
சளைக்காமல் சனங்களை விற்றவர்கள்
பிழைக்காமல் பிழைக்கின்றார் பெருமைபேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கோழிமேய்த்தல்**

*அடைக்கோழி விடாப்பிடியாய்*
*அடுப்படியில் கிடக்கும்*
*அதனைத்துரத்த அங்கேதான்*
*கிடையாய்க் கிடக்கும்*

*அடைமுட்டை தேடியம்மா*
*அலைவாவு ஊரெல்லாம் - அதனால்*
*நடைகூடி இயலாமல்*
*எழும்பாமல் படுப்பாவு*

*பெட்டியொன்று இருக்கு வீட்டில்*
*தொங்க வைத்துள்ளோம்*
*தொட்டில்போல அதனைச்செய்து*
*முட்டைகழுவி வைப்போம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைபோலப் படுக்குங்கோழி
முட்டைக்கு மேலே
தட்டுப்பட்டால் பெட்டி
தவிக்குமங்கு கோழி

தொட்டுப்பார்ப்போம் முட்டையினை
தோதான நேரம்
வெப்பமாகவிருக்கும் அந்த
வெள்ளையோட்டு முட்டை

கட்டிப்பிடித்து முட்டையெல்லாம்
காலுக்குள் வைத்துக்
கத்திக்கத்தி முட்டையினைக்
கணகணப்பாய் வைத்திருக்கும்

சுற்றித்திரியும் கோழி
சுதந்திரம் அதற்கில்லை
பத்திப் பதறிவந்து
பாய்ந்தேறும் பெட்டிக்குள்ளே

மிச்சச்சோறு, பச்சைக்கீரை
வைத்ததற்கு விடுவோம்
கொத்தித்தின்று தத்தித்தத்திப்
பெட்டிக்குள்ளே பாயும்

முட்டைகொத்தும் சத்தம்
மூன்றாம்வாரம் கேட்கும்
தட்டி எழுப்பும் மனமென்னைத்
தள்ளி நின்று பார்க்க

சொட்டு வெடிப்புத்தெரியும்
சோகத்தோடு வருவேன்
விட்டுவந்து விடிய
பெட்டிதிறந்து பார்ப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டிநட்டி நடக்கும்
நம்ம இறைச்சிக்குஞ்சு
இரைக்கு வாயை விரித்து
இரையைக்கேட்கும் இருட்டில்

அடைத்து வைத்த குஞ்சை
நடத்திக் கூட்டிச் சென்று
ஆலா காகம் கொத்தா
அருகில் நின்று பார்ப்பேன்

கொத்திவிடை கொடுக்க
கூட்டிச்சென்று நானும்
குப்பைமடுப் பக்கம்
கோழிமேய்த்துத் திரிவேன்

குஞ்சு நன்கு வளர்ந்தால்
அஞ்சத் தேவையில்லை
நன்கு வளர்ந்த குஞ்சை
நாளைப்பார்த்து விற்போம்

பஞ்சமேதுமில்லை
பறவை வளர்த்தால் வீட்டில்
தஞ்சம் என்று வாழ்ந்து
தரணி போற்ற உழைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கறியாகும் மீன்**

கறிக்கு மீனெடுக்க
கடற்கரைக்குச் செல்வேன்
கரைசேரும் மடிக்குள்ளே
கண்ணைவிட்டுப் பார்ப்பேன்

கடிக்கும் சிலவகை களிப்பில் கிடக்கும்
கட்டா காரல் கலந்து உருளும்
விட்டால் போக விரைந்து அசையும்
வெடுக்குச்சாதி கடுப்பில் கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கும் பாரை வாலால் குதித்து
அறுக்குளாவோடு சேர்ந்து கதைக்கும்
பொறுக்க முடியாது என்மனமங்கு
பொங்கியெழும்பும் கருணைகாட்ட

புள்ளிவிழுந்த கூரலங்கு
புரண்டு மிரளும் வலையைக்கண்டு
பொட்டுவிழுந்த ஒட்டியெல்லாம்
சட்டி செல்ல முட்டி மோதும்

விட்டு வைக்கும் விலையில்லாத
கொட்டி நிரம்பும் சாளை மீனும்
வெட்டுத் துண்டாய் விரும்பிச் சமைக்கும்
விழலுமங்கே விழுந்து படுக்கும்

கட்டார்த்துளைக் கலந்து பொரிக்கும்
சட்டித்தலையன் சவமாய்த் தெரியும்
கட்டிகட்டியாய்க் கறிக்குள் கரையா
கலவாயங்கு களிபோல் தெரியும்

ஒட்டிக்கொள்ளா ஓரத்தினிலே
ஓட்டுக்கணவாய் காட்டிக் கொடுக்கும்
ஓரங்கட்டி வீரம் காட்டும்
ஓலைவாலன் வாலை யாட்டும்

பாலை மீனும் பார்த்தால் பாவம்
பதறும் கடலில் குதித்துப் பாய
காலை வேளை கறிக்கு மீனுக்கு
கடற்கரை செல்லவே உனக்கது புரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெருச்சாத்திரி

கல்முனைக்குப் போயிருந்த
வீட்டாரைப் பார்த்துக்கொண்டு
வேப்ப மரத்தடியில்
வெகுநேரமாய்க் காத்திருந்தேன்.

வேட்டி சால்வையுடன்
வெத்திலையும் சப்பிக்கொண்டு
நோக்கியெனை வந்து
வாக்குசொல்லப்போறேனென்றான்.

பார்த்தேனே ஒருபார்வை
பறந்தான் பூச்சிபோல
பொல்லாத கோபமொன்று
பொத்துத்துத்தான் வந்ததப்போ.

வீட்டாரும் கல்முனைக்கு
விடைபெறாது போனதனால்
கடையிலே காலம்
கழியுது எனக்கு

நானுண்பது என்னவென்று
நன்கு அறிந்திருந்தும்
சொல்லாது போனதனால்
சோர்ந்து கிடக்கின்றேன்.

இதனால்,
சொல்லாத சில வார்த்தைகளை
சொல்லிப்போட்டன் அவனுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதென்ன? நல்லாயிருக்க
வெள்ளி என்ன? வியாழன் என்ன?
வெள்ளித்திசை என்று
வீட்டுக்க படுத்திருந்தால்
கொள்ளிவைத்து பானையில்
எதைக் கொதிக்கவைப்பாள்?

பள்ளியில் உனக்கு
சொல்லித்தரவில்லையா?
பட்டினத்தார் பாடலை
எட்டிநின்றும் கேட்டதில்லையா?

போடா மூதேவி
உழைக்கக் கள்ளத்தில்
ஓசியா சாப்பிடநீ
உன்னோடு பொய்யை
உடன்கூட்டி வாராயோ

இனிமேல் நான் உன்னை
இந்தப்பக்கம் கண்டால்..
என்று
அதட்டியவனை அனுப்பியுள்ளேன்

சாத்திரிமார் இருக்கின்றார்
சகலதும் அறிந்துள்ளார்
வீட்டிற்குத் தேடிப்போவோம்
வெற்றிலையும் கொண்டு போவோம்

நாட்டிலின்று நகைச்சுவையாய்
நாலைந்து பேரென்று
போக்குமாறி வாக்குச்சொல்லும்
பொல்லாத கூட்டமொன்று
வீடுதேடி வருகிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புளித்த பாணி

பனங்காய் பொறுக்கிவந்து
பாணி வளித்தெடுத்து
பணியாரம் சுடவென்று
வெகுநாளாய் எனக்காசை

ஒரு நாளுமில்லை
ஓடிப்போய் காலையிலே
களவாக இரண்டு
கனிந்தபழம் எடுத்துவந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகு பொறுக்கிவந்து
விடுதியில் அடுப்புமூட்டி
கரிகிரி பிடிக்காமல்
கவனமாய்ச் சுட்டெடுத்தேன்

சுட்ட பழத்தையின்று
சட்டப்படி காலையிலே
கட்டிப்பாணியாய் வளித்து
காய்ச்சாமல் வைத்திருக்கேன்

கனநேரம் யோசித்து
பின்னேரம் பிசைந்தெடுக்க
முன்னாலுள்ள கடைக்கு
பின்னால் வாங்கப் போனேன்

சொன்னால் சிரிப்பீர்கள்
சொட்டும் அங்கு சீனியில்லை
என்ன நான் செய்வதென
எனக்கிப்போ முளிசாட்டம்

பாணி புளித்தால் ருசியில்லை
பலகாரம் சுட இயலா
பார்ப்போம் எதுக்குமென்று
பக்குவமாய் சொல்லியுள்ளேன்

காலம் கனியும்
கனிந்த பழம் கிடையாதே
வோளைப் பணியாரம் இனி
மாளயம் அன்றுதானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலைத்தொழில்

காலையிலே கடற்கரைக்குக்
கறிவாங்கச் சென்றேன்
தூரமாகப் படகொன்று
கரைசேரக் கண்டேன்

ஆடிப் பாடி அலவாக் கரைக்குள்
ஓரமாக நானுமங்கு ஓடிச் சென்று
கூட மாட சேர்ந்தங்கு குளிருக்குள்ளே
குனிந்து நிமிர்ந்து இழுத்து வைத்தோம்
படகைக் கரையில்

சாளைவலை கிடந்தபக்கம்
சற்றுநான் உற்றுநோக்க
மோசமான காட்சியொன்று
சோகமாக முழுநாளுமெனக்கு

ஒன்றுமில்லை வலையதிலே
கொண்டுபோன வலையதுவே
ரெண்டுமூன்று மீனேகண்டு
என்னசெய்வோம் எனக்கேட்டான்

காலைத் தேநீரோடு
கரையில் நின்றமனைவி
ஆளைப்பார்த்து சொன்னதெல்லாம்
செத்தது போதுமென்றும்
விற்றிடுவோம் பையத்தானே
மற்றவேலை பார்ப்பதற்கு
புத்தியாக யோசிப்போமே

நல்ல பதிலொன்றுதான் என்று
நானும் நினைக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமந்த வயதுபோன மனிதன்
பார்வைகூட சற்றுக் குறைவு
நேற்றுப்போன பயணமென்று சொல்லி
எனக்கினி நீண்ட நேரம்
நித்திரை முழிக்க முடியா
என்றும் சொன்னான்

தாகம் தீர்க்கத் தேநீர்
கொண்டுவந்த அவளோ
பேச வார்த்தையின்றிப்
பேதையாக நின்றாளங்கு

எண்ண தண்ணி என்டு
எல்லாம் கொண்டு போயும்
ஒன்றுமில்லாமல் வந்தால்
எப்படி எனக்கேட்டான்

பாருமகன் அப்பா படும்பாட்டை
எனக்கூறி
ஓடுமகன் வீட்ட என்று
உரத்த குரலில் சொல்ல
ஓடினானேயவனும் பள்ளிக்குப் போகவென்று

நல்லாயிருக்க நாலுவழி தெரிந்தால்
எல்லோரும் போகும் வழியினிலே
போகத் தேவை யில்லை
பல்லோருக்கும் அது பயனல்லவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல்

பொங்கல்ப் புகையெங்கும்
பம்பரமாய்ச் சுழன்றுவரும்
மங்கலமாய் எவ்விடமும்
மகிழ்ச்சி குடிகொள்ளும்

மங்கையர் கோலமிட்டு
மனையை அலங்கரிப்பர்
மன்னவர் பொங்குகையில்
மணமொன்று எழும்பிவரும்

செங்கதிரோன் சிரித்து
செங்கதிரைச் செலுத்த
பொங்குதே வாழ்வென்று
போற்றிப் புகழ்வார்கள்

சங்கூதத் தெரியும்
சக்கரைப் பொங்கலங்கு
பொங்கி விட்டார்
பொழுது கிளம்பவென்று

பொங்கலைப் பகிர்ந்துண்ணும்
இங்கிதம் இருக்கிறதே
இந்துக்கள் இயல்பாக
இறைவனுக்கே நன்றிசெய்வர்

செந்தமிழில் பாட்டமைத்து
சேர்ந்து பாடிடுவர்
பந்தபாசத்துடன் பக்தியாய்ப்
பகிர்ந்தும் உண்டிடுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலின்று எமக்கு
அங்கலாய்ப்பாயில்லை
தொங்கலாய் அது
தொங்குகிறது எம்மனதில்

கங்கையும் பெருகிட
கடும்மழையும் தொடர்வதால்
எங்குமே வெள்ளம்
தங்கிட இடமுமில்லை

வழமை வழக்கு
வழக்கொழியப் பார்க்கிறது
வரிசையில் நிற்பது
வாடிக்கையாகிறது

புதுமை எமக்குள்
புகுந்துவிடப் போகிறது
கொடுமை கொடிபோல்
படர்ந்து விரிகிறது

தினக்கூலி தெருவோரம்
வேலைக்காய் அலைகின்றான்
உழைத்தாலும் ஒருபோத்தல்
குடிக்கின்றான் உளம்மகிழ

பணக்காரன் கணக்காக
பதுக்குகின்றான் பலசரக்கை
எமக்கான பொங்கலொன்று
எப்போதோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரவன் காதல்

கிழக்கினிலே முளிப்பதற்கு
வெளிக்கமுதல் போவேன்
கிழக்கதனைக் கிழித்துவரும்
கதிரவனைக் காண்பேன்

முளித்துவிட்டால் முழுநாளும்
இதமாய் இருக்கும்
முடிந்தவரை முயற்சித்து
முன்போவேனங்கு

ஆழியிலேயிருந்து மேலெழும்பி
ஆதவன் வரவே
அலையெல்லாம் கைகூப்பி
வணங்குவதைக் காண்பேன்

சுனையெல்லாம் சூழுமதன்
சூடான கதிர்கள்
சுழிகள் கூட நடனமாடிக்
கொண்டாடும் காண

விழிகள் நன்கு விரிவடைந்து
விடியலைப் பார்க்கும்
மொழிகள் வந்து மோதியென்னில்
மொழியக் கேட்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியா விட்டால்
சதிகாரன் என்று
என்னை சாபம்போட்டுச்
சட்டென்று அதனழகை
எழுதவாதல் கேட்கும்

செம்மஞ்சள் நிறத்தினிலே
சேலையொன்றைப் போர்த்தி
சேர்த்து ஆழியைத்தன்னுள்
அணைத்துக் கொண்டு

பெண்ணொன்றும் ஆணொன்றும்
பிரள்வது போலக்காட்டி
கண்கொண்டு பார்க்காமலெனைக்
கதிரவன் தடுப்பான்

விண்மட்டும் பார்த்ததனை
நன்கு ரசிக்கும்
விளக்கமொன்றும் தெரியாமல்
தடுமாறி நிற்பேன்
நெருக்கமான அந்த உறவை
நேரில் காணா
வருத்தமாகவே தினமும்
வந்து சேர்வேன்

கண்ணினைக் கட்டி
காட்சியைக் காட்டி
கதிரவன் கலவியில்
களிப்புறும் வேளை
கடலினுள் வாழும்
உயிர்களே மட்டும்
காணக்களிப்புறும் கள்ளத்தனக்
கதிரவன் காதலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்தம் பல சத்தம்

வீடுகளில் மாடுகளின் மணியோசைச் சத்தம்
வீதிகளில் போகின்ற வாகனச் சத்தம்
காடுகளில் கூவுமந்த குயிலோசைச் சத்தம்
கடுகதிப் புகைவண்டி ஊதுமொரு சத்தம்

கோயில்களில் கொள்ளை கொள்ளும் கோமாதாச்சத்தம்
கோவிந்தன் ஊதுமந்த குழலோசைச் சத்தம்
வேதியர்கள் ஓதுமந்த வேதங்களின் சத்தம்
தேவியர்கள் பாடுமந்த பாமாலைச் சத்தம்

பள்ளியிலே ஓதுமந்த வாங்கோசைச் சத்தம்
அள்ளித்தரும் ஆலயத்தின் காண்டாமணிச் சத்தம்
துள்ளிப்பாயும் கன்றுக்குட்டி போடுமொரு சத்தம்
துப்பாக்கி வெடிக்கையிலே கேட்கும் வெடிச்சத்தம்

பள்ளிக்கூடம் நடக்கையிலே பாடச் சத்தம்
அள்ளிக்குளிக்கத் துலாவங்கு அசையும் சத்தம்
சுள்ளி விறகு சுருண்டெரிந்து பற்றும் சத்தம்
சுருட்டப் பாடயினைக் கேட்கும் பறைச்சத்தம்

சந்தையிலே வந்தவர்கள் எழுப்பும் சத்தம்
சாவீட்டில் போடுகின்ற ஒப்பாரிச் சத்தம்
கங்கையோடிக் கலக்கின்ற கலப்புச் சத்தம்
கன்னியர்கள் பாடுமந்த எம்பாவைச் சத்தம்

வெறித்தவர்கள் விடியும்வரை வீழ்த்தும் சத்தம்
தெறித்தவர்கள் தெருவினிலே கூய் போடும் சத்தம்
குறித்த பல சத்தத்துடன் இன்னுமொன்று
குறட்டை விடும் போதினிலே எழுப்பும் சத்தம்
அதைவிட குமரிகள் கூடிச்சிரிக்குமொரு கும்மாளச்சத்தமென
சத்தம் பல நித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மறுபிறப்பு**

நள்ளிரவு வேளை
நடைச்சத்தம் தெருவில்
எல்லையில் வெடிச்சத்தம்
இரவெல்லாம் நாய்ச்சத்தம்

பிள்ளைகள் படுக்காது
பெண்கள் பயப்படுவர்
துள்ளிக் குதித்துத்
துரத்திப் பிடிப்பார்கள்

அள்ளிக்கொண்டு வந்த
அதிரடி எல்லாம்
பள்ளிக்கூடத்தில் படுத்து
பதுங்கிப் பார்த்திருப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிக்கம்பு போல்
கொண்டுவரும் குழாயோடு
தள்ளித்தள்ளி நின்று
தரையிலும் கிடப்பார்கள்
எல்லாம் தலையைக்
காப்பாற்றத்தான்

அள்ளிக் கலக்கும் அடிவயிறப்போ
அவர்களைக் காண
சொல்லிக் கொள்ள மாட்டேன்
வீட்டாரைச் சோரவும்விடமாட்டேன்

வெள்ளிக் கிழமை யொருநாள்
வேலைக்குப் போக வேண்டும்
விடியச் சாமமன்று வேலியோரம்
தலைதெரிகிறது என் நிலைகுலைகிறது.

அடோவென்று அதிரக்கூப்பிட்டுத்
தடதடவென தட்டினர்கதவைப்
படபடவென அடித்ததுமனம்
பதறுகிறார் வீட்டார்

விறுவிறென்று வீட்டைநோக்கி
விரைவாக வந்தவர்களைப்பார்க்க
கறுகறென்று கறுத்த
சுடுமூஞ்சி முகம்

துப்பாக்கி பாய்ந்தது
துளைத்தது சுவரை
அப்பாவியென்று அனைவருமழுது
ஒப்பாரியாய் ஓலமிட்டோம்

கொலையாட்டம் கொடூரமாய் நடந்தேறி
வலைபோட்டுப் பிடித்து வழித்தெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்சிலேற்றிச் சென்று
தலையாட்டி முன்னாலே
எம்மைத் தடுமாற விட்டார்கள்

முலையூட்டி யெல்லாம்
முட்கம்பிக்கு வெளியே
அலைமோதியது அன்று
அழுது புலம்பியது

விலைபேசி வெளியெடுக்கும்
கொலைகாரர் பலபேர்
உலைவைத்தார் அவர் வீட்டில்
உள்ளம் மகிழ்ந்தபடி

மலைபோலொருவன்
குலை நடுங்குகிறதெனக்கு
குப்புறப் படுவென்றான்
கும்பிட்டேன் முருகா முருகாவென்று

கூப்பிட்ட சத்தமொன்று
அடியேதும் விழவில்லை
நடையாக ஓடென்றான்
நடுங்கியது உடம்பெனக்கு

விடை கொடுத்தான் விரைந்தேன் வீட்டுக்கு
வெறிச்சோடிக் கிடக்கிறது
இறந்துவிட்டேன் நான் என்றொரு கதையும்
மறந்துவிட முடியாத மறுபிறப்பு எனக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவிக் காவல்

காலைப்பனியில் மூடிக்கதிர்கள்
ஓலைக்குள்ளே ஒழிந்திருந்து
ஒன்றையொன்று பார்க்க
சேலைக்குள்ளே சிவந்த பெண்ணொன்று
சிரிப்பது போலவே எனக்கிருக்கும்

மூட்டைப்பூச்சியும் ஆட்ட அசைவின்றி
கூட்டம் கூட்டமாய்க் குளிர்காயும்
வேட்டையாடவதை வேற பூச்சியும்
வாட்டசாட்டமாய் வளைத்து வரும்

பாட்டமாயும் கூட்டமாயும்
பறந்துவரும் குருவிகள்
பரணைநோக்கி எம்மை
நோட்டம் விடும்

ஆட்டம் போட்டும் பாட்டுப்பாடியும்
அதைக்கலைக்க
வேட்டு வைத்து வெடி கொளுத்தி
கூக்குரலிட்டுக் கூயென்றும் கத்துவோம்

குருவி விரசக் கொடுகியிருக்கும்
கூதல் பிடித்த உடலோ
ஒரு வடிவம் எடுக்கும்
வார்த்தையில்லையதைச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பில் நின்று பயிரையொதுக்க
வழுக்கிச் செல்லும் தண்ணீர்ப் பாம்பு
கழுத்தை வளைத்து கதிரையசைத்துக்
கடுகதியாகச் செல்லும் காட்சியில் கண்டு
களிக்கும் மனதைக் கட்டுப்படுத்தக்
கதிரவன் உதிக்கும் பக்கம் பார்ப்பேன்

கதிரில் பால்கள் களியாகும்போது
சவளும் தண்டு தலைகீழாயங்கு
பதறும் சிலது இருக்கும் அதிலே
பச்சை மஞ்சள் காயும் இருக்கும்

கறுப்பான் கூடக் காய்ந்து கிடக்கும்
கதிரொளி படவே களிப்புறும் கதிர்கள்
தலைகீழாய்க் குனிந்து வணக்கம் செய்யும்
கண்மணியங்கே கலைக்கக் குருவியை
என்மன மெல்லாம் பதறித்துடிக்கும்

அறக்கொட்டிப் பூச்சியடியிலமர்ந்து
அன்றாடமங்கு நன்றாகவுண்ணும்
அளைக்குள்ளேயசையும் அயிரல் மீனும்
சுரிக்குள்ளே சுத்தி சுகமாய் நீந்தும்
மழைக்குள்ளே இவைகள் மடுவில் இறங்க
அமர்க்களம் நடக்கும் அதுமிகையாகா

குருவியுமில்லை கூட்டமுமில்லை
பரணுமில்லை பாயுமில்லை
பொன்னான காலமதை
எண்ணிப் பார்க்கையில்
அந்நாளின் ஆனந்தம்
யாருக்குமில்லையினிமேல்
என்றல்லோ தோணுதெனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சினைக்கெழுத்தி

ஏறு கெழுத்தியள்ள
சாறனோடு போவோம்
தாறுமாறாய் அள்ளி
தரையில் கொட்டிக்களிப்போம்

தலைமழையில் புழுதிமணம்
தரையிலிருந்து செல்லும்
தரைதேடும் சினைக்கெழுத்தி
கரையை வந்துசேரும்

பெருகிவரும் நீரினிலே
சுரியிற் கிடந்த கெழுத்தி
பேரிரைச்சலோடு வந்து
பெருக்குக்குள்ளே நெழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமழையில் ஆறு
பெருக்கேற வரும்கெழுத்தி
புகுந்திடவே வக்கடைக்குள்
பூரித்து நிற்கும்

வாலாட்டி வந்ததெல்லாம்
வரவைக்குள் சென்று
வந்தவழி போவதற்குத்
திரும்பியது மாறும்

கண்டவர்கள் வக்கடையைக்
கட்டிடவே நன்கு
சென்றதெல்லாம் சிக்குண்டு
சேர்ந்தங்கு நிற்கும்

விடியலுக்குள் வெள்ளம்
வடியத் தொடங்கும்
விழிப்பாக இருப்பார்கள்
விரைந்து அள்ள

திக்கெட்டும் திரிந்தே
வக்கடை அடைத்து
திரும்பிச்செல்லும் வழியினிலே
அத்தாங்கை வைப்பார்

வாலாட்டி வரும் கெழுத்தி
வரம்புக்குள் நின்று
கோலாட்டம்போட்டுக் கொண்டாடி
கொலுகொலென்று போகும்

குத்தியள்ளிக் கெழுத்தியைக்
குவிப்பார்கள் மலைபோல
குத்திவிட்டால் சிலநேரம்
குதிப்பார்கள் கடுப்பாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளியெடுத்துக் கெழுத்தி
நல்ல விலைக்குக் கொடுத்தால்
பள்ளிக்கூடப் பக்கம்
செல்ல விருப்பமில்லை

கறிக்கு எடுத்து வந்து
பிரித்தும் கொடுப்போம் அருகில்
அறுத்தெடுக்க அம்மா
அதிகநேரம் எடுப்பா

அறுத்த கெழுத்திக்குள்ளே
அதிகம் சினைதானிருக்கும்
வெளியில் எடுத்து அதனை
வேறாய் வைப்பா அம்மா

அரைத்து அம்மியிலெடுத்து
சரக்குச் சாமானோடு
அறுத்தெடுத்த சினையை
அடுப்பில் வைத்துச் சமைப்பா

மாங்காய் போட்டுச் சமைக்க
மணமும் எழும்பி வீசும்
பாங்காய் உண்ணும் வழக்கம்
பழக்க மெங்கள் ஊரில்
இப்போ, கெழுத்திக்கதையைச் சொன்னால்
கெட்டுப் போகும் வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகிய மரம்

அழகான மரங்கள் நிழலாகும் எமக்கு
அறிவான மக்கள் புதிதாக வளர்ப்பர்
குழிகளை அமைத்து கூட்டெருப் போட்டு
வெயிலான காலம் குடையதில் கிடைக்க
பெரிதாகும் வரையும் பேணிக்காப்பர்

பகையான மிருகங்கள் படுக்கும் அங்கு
பறவையும் அதிலே பறந்து தங்கும்
இலைகளை உண்டு மிருகங்கள் வாழும்
இயற்கை காற்றை இனிதே கொடுக்கும்

பழங்கள் பழுக்கும் காலத்தில் அங்கு
பறவைகள் பறந்து அவைகளை உண்ணும்
வேரினடியில் ஆறியமர
விருந்தினர்க்கங்கு இடமுமுண்டு

ஏறித்தாவி விளையாட
ஏற்ற இடமும்துதானே
கூடுகட்டிக் காடாய்வளர்ந்த
சாலையோர மரமுமுண்டு

குளவிக்கூடு பறவைக்கூடு
குரங்குபாயும் இடமுமுண்டு

தோழமையாக வளர்த்தனரன்று
வேதனையின்றி வாழ்கின்றாரின்று
மரத்தால் மனிதன் மகிழ்வதையெண்ணி
மனங்கள் எல்லாம் குளிர்வதைக் கண்டேன்

வளர்த்த மரங்கள் வயதாகிப் போனால்
இறப்பு என்று அதற்கும் உண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீதுசூது கொள்ளமாட்டேன்

என்னூரென்று எவரையும் நினைப்பேன்
என்னுயிர்போல மனிதரை மதிப்பேன்
உண்மை உயிர்பெற உடனாயிருப்பேன்
உறவுகள் நலம்பெற மெழுகாயுழைப்பேன்

எண்ணும் எழுத்தும் கண்ணெனக் காப்பேன்
ஏமாற்றி எவரையும் கெடுக்கவும் மாட்டேன்
என்வழிப் பாதையை இயல்பாக அமைப்பேன்
எவருக்காகவும் அதை மாற்ற மாட்டேன்

தமிழிலே கவியினைத் திறம்படப் புனைவேன்
தலைவரை எங்கும் மரியாதை செய்வேன்
தந்தையை என்றுமே வந்தனை செய்வேன்
(அவர்) தந்திட்ட அறிவினை என்றுமே காப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசத்தால் நெருங்கி நெஞ்சிலே நிற்பேன்
பாசத்தால் கொடிபோல் படர்ந்து விரிவேன்
ஓசியாய் ஒன்றையும் வாங்கவே மாட்டேன்
உள்ளொன்று வைத்துப் பேசவும் மாட்டேன்

வாசியாய் வருவதை விடவும் மாட்டேன்
வழிமுறை தெரியாமல் போகவும் மாட்டேன்
தூசியாய் மனிதனை நினைத்திட மாட்டேன்
துன்பத்தைக் கண்டு துவளவும் மாட்டேன்

பேயாய்க் காசுக்கு அலையவே மாட்டேன்
பெட்டிப் பாம்பாய்ப் படுக்கவும் மாட்டேன்
வாயால் வார்த்தை தவற மாட்டேன்
வந்த பாதையை மறக்கவும் மாட்டேன்

நோயால் கிடந்து சாகவே மாட்டேன்
நொந்து வெந்து மாயவும் மாட்டேன்
நாயாய்ப் பின்னால் ஓடவே மாட்டேன்
நட்பைக் கெடுக்க விரும்பவும் மாட்டேன்

தேயாய்த் தேய்த்துக் கிடக்கவே மாட்டேன்
(நம்) தேசம் விட்டுப் போகவும் மாட்டேன்
ஆசைத் தமிழை அழிக்கவே மாட்டேன்
(அதை) நாசஞ் செய்ய விடவும் மாட்டேன்

வேஷம் மாறித் திரிய மாட்டேன்
வேங்கை போல வாழவும் மாட்டேன்
தீங்காய் எதையும் பண்ண மாட்டேன்
தீது சூது கொள்ளவே மாட்டேன்

தானாய் சென்று பேசவும் மாட்டேன்
தக்காரென்றால் தொடரவே மாட்டேன்
ஏதோ நானும் இருக்கின்றேன்
(நாளை) எண்ணிக் கொண்டே படுக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக்காலக் காட்சி

ஊரிலேயுள்ள புற்றுக்களில்
ஒழிந்து வாழ்ந்த ஈசலெல்லாம்
மாரி மழைக்கு
மடைதிறந்த வெள்ளம் போல
கோடிக் கணக்காய்
கொண்டாட வந்து
தேடிப்போய் வெளிச்சத்தில்
தேவையில்லாமல் விழுந்திறந்து
நாறிக்கிடக்க நான்கண்டதனை
வாரி வளித்தெடுத்து
வாளியில் அள்ளி
கோழியைக் கூப்பிட்டுக்
கொடுக்க உணவாகக்
கூடிக் குதூகலித்துக்
கொண்டாடி உண்கிறது

காடு கரையெல்லாம்
கார்முகில் எழும்பிவர
ஆடும் மயிலும்
அதனை ரசித்திருக்கையிலே
கூடியுழவர் கூட்டமொன்று
கூட்டுமுளை ஆகுமென்று
பாடுபட்டுப் பறந்து
பள்ளவயல் பக்கம்சென்று
மூடி வக்கடையை
முழுதாக வடியவிட்டு
சோடியாக உழவர்கள்
சோர்ந்துவர நான்கண்டேன்

கூடிக் கும்மாளமடிக்க
தேடும் தவளைகளின்
தெம்மாங்கு ஓசையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுகள் குளமிருந்து
பாதைகள் கடந்துவந்த
பாலாமைக் குஞ்சுகள்
ஓடுபிரண்டு ஓட்டைவிழுந்து
ஊத்தை மணமெழும்ப
மூக்கைப்பொத்தி நின்று பார்த்தேன்
காக்கை கொத்தியதைக்
களிப்போடு உண்கிறதே

நாக்கை நீட்டி நக்கிப்பிடிக்க
மோப்பம்விடும் மொத்தமான
தண்ணீர்ப்புடையன்
சாப்பைக்குள்ளே மறைந்து
சத்தமில்லாமல் காத்திருந்து
ஆத்திரம் கொண்டு
அப்படியே கடிக்க
சேத்துத் தண்ணியில்
சேர்ந்து செல்லும்
சிவப்பு இரத்தத்தை
நாக்குளியான் புழு
நக்குவதை நான் கண்டேன்

மோக்கைத் தவளை முக்கிடும் போது
முழுதாய் எவருக்கும் நித்திரையில்லை
கேட்க அதனைக் கணீர் கணீரென
கிலுங்கும் சத்தமும் சேர்ந்து கேட்கும்
வாய்க்கால் வழியால் வாற தண்ணி
வக்கடையுடைத்துப் பாயவங்கு
சோக்காயிருக்கும் சுருதிகள்பாடலுடன்
சுதந்திரத்தமிழுக்கு
மென்னிசை கொடுக்கும்

காத்தியான் பூச்சிகளும்
களைப்போடு செல்கிறது
பார்க்கவதனை மீண்டும்நான்
பட்டணம் விட்டே போக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காலத்தின் கவி

ஏமாந்து விட்டேனே
எதுகை மோனையுடன்
ஏராளம் கவியெழுதி
எடுப்போடு வாசித்து

எவர் கைக்கும் போகாது
கிடப்பாகப் போட்டுக்
கிழித்தெறிந்து நூறாய்
சறத்துக்குள் மறைத்தெடுத்து
சருகுக்குள் போட்டு
கொழுத்து கொழுத்தென்று
கொழுந்து விட்டெரிய
அத்தனையும் அடியோடு
பற்றவைத்துக் கரியாக்கி
பறக்காமல் கிறக்காமல்
பார்த்து நின்று
வெட்டித் தாட்டதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுநடை போடும் அந்த
கெட்டித்தனமான
கவிதையல்லோ
இப்போ குப்பை மடுவுக்குள்
செத்துக்கிடக்கும்

குப்பைமடு குமரியாயிருந்தால்
தப்பு நடந்திருக்கும் எப்போவோ
தண்டனையும் பெற்று
தடுப்பிலும் இருந்திருப்பேன்
ஒப்பிடுவேன் ஒன்றுக்குப்பத்தென்று
ஓவியம் கொடுப்பேன்
ஒவ்வொரு வரிகளுக்கும்
தப்பில்லைதானே
அவை கவிதையில்
மற்றொருவர் அறியாத
என் மனவுணர்வுகளே

எழுதியவை ஏராளம்
எறிந்தவை தாராளம்
பக்கத்துவீட்டுப் பாழ்வளவு
காவளா பற்றைகள் கூட
பத்திரமாக வைத்திருந்து
அரை நித்திரையிலும்
அதை உற்று நோக்கி
ஒழித்து வாசிப்பதை
ஒட்டி நின்று பார்த்து
கைதட்டி சிரித்து நான்
களித்ததுமுண்டன்று

நான் எழுதியது கவிதையா?
தண்ணியடித்த (மது) காலங்களில்
தாராளம் கவிதை சொல்வேன்
எண்ணியும் பார்ப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத அதையெல்லாம்
எழுந்திருக்க விருப்பமில்லை
கண்ணும் கட்டுப்போட்டு என்னைக்
கட்டிலுக்குக் கூட்டிச் செல்லும்

எண்ணிப் பார்த்தால்
எத்தனை வெளியீடு
சின்னப்பருவம் சிந்திப்பது
அவையெல்லாம்
கவிதை இல்லையென்று
முந்தி எடுத்த அப்போதைய
முறையற்ற முடிவுகளால்
பிந்தி விட்டேன் பின் வரிசையாகிவிட்டேன்

முதல்முறையாக கவிதையொன்றை
முகநூலில் பதிவேற்ற
வகை தொகையின்றி
வாழ்த்துரைத்த விதமறிந்து
காலத்தாலழிந்த என்
கவிதைகளை நினைக்கையிலே
ஹம்சரல்லோ பொறுப்பதற்கு
என்றுமனம் எண்ணியது

என்றாலும் பரவாயில்லை
எழுதுவோம் சில கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழ்க்கவி**

*தமிழ் என்ற மரம்*
*தழைகளில் பூப்பூத்து*
*நறுமணங்கமழ*
*நான் அதைக் கவிவடித்தேன்*

*தினந் தோறும் வண்டொன்று*
*திசையறிந்து வந்தங்கு*
*தமிழ்தேடி அலைந்திட்டு*
*தலை வணங்கி நிற்கிறது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளியேதும் முடிவின்றி
துல்லியமாய் பருகிவிட்டு
மொழியான எம் தமிழினிலே
மொழிந்ததே வாழ்கவென

விரைவான மொழி வளர்ச்சி
வெற்றியல்லோ தமிழுக்கு
முறையாகக் கவியெழுத
குறைவற்ற வல்லவர்கள்

நிறைவாக எழுதுவதால்
நித்தமும் ஜொலிக்கிறது
துறையாகக் கவிவளர
தொடரான பயிற்சியுண்டு

புலம்பெயர் புலமைகளின்
புதிதான கவிவடிவம்
பறை சாற்றப் பாரினிலே
பார்த்து நான் ரசிக்கின்றேன்

நிகழ்கால ஒலிபரப்பல்
நிகழ்ச்சிகளோ ஏராளம்
குறையாமல் வளர்த்தெடுக்க
மக்களோ தாராளம்

தமிழ்க் கிளையோ வளைகிறது
தவழ்ந்து நிழல் தருகிறது
புகுந்து நின்று புலமை பெற
புது வடிவம் கொடுக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சின்னத்திரை**

*சின்னத்திரையில்*
*சீனிப்படங்களைக் கண்ணை சிமிட்டாது*
*உன்னிப்பாக*
*ஊருறங்கும் வரை*
*பார்த்திருந்து*
*படுக்கைக்கு போனால்*
*எப்படி இருக்கும்?*

*அத்திரை அன்றே*
*உள்திரையாகி*
*உன்னுள்*
*ஓடிக்கொண்டிருக்கும்*
*ஒரு முழுப்படமாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை குழம்பி
நிம்மதியிழந்து
மற்றவர் குழம்ப
மறதியில் கதைப்பதும்
செக்குப் போல்
பக்கத்தில் சேர்ந்து படுப்பதும்
நிற்காது போகுது நீண்டநாளாய்

படிக்கிற பிள்ளையைக்
கெடுத்துப் போட்டிடவே
பக்கத்துப் பிள்ளை
பாஸ் பண்ண அன்று
துக்கமாய் இருந்தாலும்
தொடங்குவாள் பார்க்க
நாடகம் தொடராய்

முடிக்கிற மாதிரி
முடிப்பது தானே
முகத்திலே முளிப்பதும்
தடுப்பில்லை தானே
உனக்கெல்லாம் இவையோ
புதிதில்லை தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்ட குறி

குடி மறந்த கன்றுகளுக்குக்
குறிசுடவோர் நாளொன்றைக்
குறித்திடுவார் மூத்தப்பா!
பஞ்சாங்கமதைப் பார்த்து
பத்திரமாய்ப் பேப்பரொன்றில்
பக்குவமாய்க் குறித்தும் வைப்பார்

பருவமழை தொடங்கமுன்பு
பட்டியடி வளவினுள்ளே
பகல் பொழுதொன்றில்
பட்டயம் தீட்டப்படும்
ஐந்தாறு கன்றுகட்கு
அதுவோர் நாளில்
அழகாய் நடந்தேறும்

குறிசுடும் நாளன்று கொண்டாட்டம் எங்களுக்கு!
பாவம் கன்றுகள்! பதைபதைப்பு அதுகளுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகள் யாவும்
மல்லாந்து கிடக்கையிலே
மூத்தப்பா பார்த்துப்பார்த்து
மும்முரமாய்க் குறிசுடுவார்
அப்போ
பாவப்பட்ட கன்றுகளும்
பரிதாபமாக எமைப் பார்த்தே அலறும்
பாவமெல்லாம் நமக்குத்தான் - அதைப்
பார்க்கும்போது மனம் பதறும்!

குறிவைக்கும் கன்றெல்லாம்
கூட்டாகப் படுத்திருக்கும்
கால்களைக் கட்டிக்
கவனமாய் அதைவிழுத்திக்
கொள்ளியடுக்கிக் கொழுந்து
விட்டெரியும் தீயில் - சூட்டுக்
கோலதனை சொருகி வைத்துப்
பழுக்கக் காய்ச்சி
மெதுவாய் எடுத்ததனைக்
கன்றுகளின் பின்கால் முகட்டில் - வரி
பிசகாமல் குறிசுடுவார்!

மாட்டுக்கொசுவந்து கன்றுகளைக்
கடித்து வைக்கும்
வாலை நிமிர்த்தி
வாள்போலதைச் சுழற்றி
வக்கணையாய்க் கொசுக்களை
வடிவாய் அவை விரட்டும்!

வைக்கோல் போரருகே
வரிசையாய் வளைத்து நின்று
நாம்பனும் நாகுகளும்
நாக்கால் கவ்வி
நன்றாக அசைபோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவொரு வடிவுதான்
பட்டியடிக் காட்சியெல்லாம்!

சூட்டுக்கோலைப் பழுக்கக் காய்ச்ச
சுள்ளியெரிக்கையில் சுள்ளென்று
பொறிபறந்தால் சுற்றயல் பூராவும்
சுடுகாடாயாகிவிடும் என்பதால்
வைக்கோல் போரருகில்
வைக்கமாட்டார் தீனாவை

மாடுகளும் கன்றுகளும்
மாலைக்குள்ளே பட்டிவந்தால்
குமித்திருக்கும் உரிமட்டைகளைக்
கொண்டுவந் தடுக்கிவைத்து
ஓலைகளை அதில்செருகி
ஓமம் வளர்ப்பதுபோல்
புகையை வைத்தோமென்றால்
"புஸ்" சென்று ஒலியெழுப்பி
கொசுவெல்லாம் பறந்துபோகும்

பார்க்கும் எங்களுக்கும்
பரவசம்தான் மேலோங்கும் .
அந்தப் புகைவைக்கும் பொறுப்பு
பொதுவாக எனக்குத்தான்.

மாடென்றால் தெரியும்தானே
விடியவிடிய அசைபோடும்
வைக்கல் கும்பமொன்று
வடியாய்க் குமித்திருக்கும்
அதனருகில் இவ்வேலை
ஆகாதென்றிடுவார்

புகைக்கும்பம் அதனருகில்
போர்த்திட்டுக் குந்தியிருந்தால் -
காலைப் பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகச்சித சுகமாகும்
காலைப் பனிக்கும்
கணக்கான சுதியாகும்

புகையும் மேலெழும்ப
கொசுவெல்லாம் மேலெழும்பும்
அதைக்கலைக்க மாடெல்லாம்
வாலால் அதைவிசுக்கும்

கொள்ளிதணலாகி - சூட்டுக்
கோலைப் பழுக்கவைத்து அப்போ
கன்றுகளை ஒவ்வொன்றாய்
கால்கட்டி வாலிழுத்து
தலையை அமத்தி
தரையிலே கிடத்திவைத்து
பழுத்த அக்கோலெடுத்து
பவ்வியமாய்க் குறிவைப்பார்

சாவொன்று நடப்பதுபோல்
சத்தமிட்டுக் கன்றுகத்தும் - அதை
சாதுவாயும் கணக்கெடாது
சரியாகக் குறியைவைப்பார்

மயிரெல்லாம் பொசுங்கி
மணமொன்று மேலெழும்பும்
ம்.... பா..... ம்..... பா
என்றந்த மாடெல்லாம் கத்தும்
ரெண்டு மூன்றெழுத்துக்களை - வயிற்றில்
ரேகைபோல் வரைந்திடுவார்
தொடைப்பகுதி மேலேயொரு
படமும் வரைந்துவைப்போம்

வைத்தகுறியைப் பார்த்து ஊரார்
வகுத்திடுவார் யார் பட்டியென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"த" வென்று குறிசுட்டால்
தம்பிப் பிள்ளையரின் பட்டியதாம்
"சீ" என்றிட்டால் சீதங்கம் பட்டியதாம்
ஒவ்வொரு எழுத்தும்
ஒவ்வொன்றாய் உரிமைபேசும்

மாரிகாலம் வந்தால் மறந்துமிதைச் செய்யமாட்டார்
மற்றக் காலமதில் ஒருதடவைதான் செய்வார்
சுட்டபிறகு கட்டவிழ்ந்தால் கன்றுக்குட்டி
விட்டால் பிடியாத வீரக்குட்டி நாம்பனாகத்
துள்ளித்துள்ளித் தூரத்துக்கது ஓடும்

இப்பென்றால் யார்தான்
இதையெல்லாம் செய்கின்றார்
மிருகவதையென்று மிரட்டுகின்றார் ஒருசாரார்
பட்டன் போலவொரு
தோடொன்றையதன் காதில்
தொங்கட்டான் போலத்
தொங்கவிடுகின்றார்...
அவ்வளவுதான் ம்...
அதுவொருகனாக்காலம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெருமழை விவசாயம்

முகிலெல்லாம் மூட்டைகளை
முதுகினிலே சுமந்தெங்கோ
துயிலின்றித் தொடராக
தூரவிடம் செல்கிறது

மயில்காண மகிழ்ந்தங்கு
துணையோடு ஆடிவர
ஒயில்கண்ட ஒவ்வொன்றும்
உறவுக்குள் மோதுதங்கு

கடலினிலே கண்வைத்துக்
காதலித்த கதிரவனின்
கைப்பிடித்து மேலெழுந்த
கன்னிகையை விண்கொண்டு

கருவாக்கி உருமாற்றி
கானகத்துள் பிரசவிக்க
வழிதேடி நடையாக
வழிந்தோடக் கரைகாணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளியான மழையாலே
பெருவெள்ளம் உருவாகப்
பெருவாரிப் பயிர்செய்யும்
பெருமக்கள் நிறைந்தவிடம்

வருமானம் கிடைக்காமல்
வளர்பயிரால் இவ்வாண்டு
கடனோடு இருக்கின்றார்
களிப்பில்லை முகத்தினிலே

உரமின்னும் வரவில்லை
ஒருத்தருக்கும் கொடுக்கவில்லை
மழைவந்தும் மகிழ்ச்சியில்லை
மண்வளத்தில் மீட்சியில்லை

மழைதொடங்க உழவேண்டும்
மண்காய விடவேண்டும்
களைநன்றாய்க் காய்ந்துவிட
முளைகொண்டெறியவேண்டும்

இதுவெல்லாம் செய்வதற்கு
எவரிடமும் காசியில்லை
மழைபார்த்து விளைவிக்கும்
மண்வளமும் செழியாது

தொழிலாகச் செய்பவர்க்குத்
தொல்லைகளைக் கொடுத்துவிட
வெளிநாட்டுப் பசையரிசி
விற்பனைக்கு வருமிங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுக் காதல்

கண்ணுக்குள்ளே கதிரை போட்டுக்
காலாட்டி ஒழித்திருக்கும் கன்னிகையை
என் எண்ணத்திலே இருத்தியின்று
இரவு பகலாய்க் களிக்கின்றேன்

அவள் கன்னத்துக் குளியும் கார்குழலும்
அன்னத்தின் நடையும் அழகுப் பொலிவும்
என்னவளாய் ஏற்றிடவே என்மனம் துடிக்கிறது.

என் உள்ளுணர்வில் பரவிய
அவள் எண்ணங்களில் கொள்ளை கொள்ள
எங்கோதான் அழைத்தென்னைச் செல்கிறதோ?

கள்ளுண்ட வண்டாகக் களிப்பினில் கிடக்கையிலே
கனவொன்று கண்டகதை கடைசியிலே தெரிந்ததுவே

வழியிலே வந்தவளின்
வதனத்தில் மயங்கியதால் நான்
வழிப்போக்கன் நிலையிழந்து
விழிக்குள்ளே முடிந்து விட்டேன்

குழிசென்றால் நமக்கென்ன
கூட்டிக்கொண்டு போவோமென்று
மனம்சொல்ல நான்கேட்டு மறுகதை பேசவில்லை

நிலத்தடி நீருண்டு குடித்திடுவாயென்றாள்
உளத்தடி உயிருக்கு உயிரணு உனதென்றாள்
மனக்குடி அமைத்தென்னை மணந்திடு நீயென்றாள்
மண்போகும் வரையெனக்கு மகிழ்ச்சியை அளியென்றாள்

நெஞ்சு வெடித்திடும் போலென்று நிமிர
பஞ்சுத்தலையணையே பாடாய் என் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருக்கெண்ணை

மஞ்சக்குருவி மீனெல்லாம்
மடிக்குள் துடிக்க நான் கண்டேன்
பொறுக்கி எடுத்துப் பொரிக்கவதைக்
கொடுக்க வீட்ட நான் வந்தேன்

உருக்கெண்ணை இல்லையென்று
உள்ளே சத்தம் நான் கேட்டேன்
விளக்கெண்ணை கூடாதென்று
விஷயத்தையும் சொல்லக் கேட்டேன்

போத்தலெடுத்துப் புறப்பட்டேன்
மூத்தவனின் கடைக்கங்கு
பார்த்திருக்கப் பால்பிழிந்து
ஊற்றித்தந்தான் உருக்கெண்ணை

சாத்திரமன்று பார்த்ததுபோல்
சகலனும் வந்தான் வீட்டிற்கு
போத்தலும் ஒன்றெடுத்தங்கு
பொரியலை முடித்து வைத்தோமே

காற்றிலிருந்து அடித்ததுபோல்
கல்லோயா எமக்குமேலேறி
வாய்க்கு வந்த வசனமெல்லாம்
வம்பாய் செல்லவிட்டோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முளைகட்டல்

விவசாயக் கந்தோரில்
விதை நெல்லையெடுத்து
வேறாக்கத் தண்ணியிலே
போட்டதனை வடித்து
முளைக்குரிய நெல்லதனை
சாக்கினிலே கட்டி
முழுநாளும் வாய்க்காலில்
ஊறவதை விடுவோம்

ஓடிவரும் தண்ணியங்கு
கழுவிப்போகும் நெல்லை
மூடியுள்ள சாக்கினையே
முகர்ந்துதிரியும் மீன்கள்
சூடுபட ஆமையது
ஏறித்தாவும் சாக்கில்
சுழள்வடித்து நீரங்கு
சாக்கில் மோதியோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொன்று கழிந்தபின்பு
இழுத்து அந்தச்சாக்கை
நன்றாகத் தண்ணீரை
வடியவிட்டுப் பின்பு
வீடுகொண்டு சேர்த்ததனை
விட்டுச் சிலமணிநேரம்
விரிப்பினிலே பரவியதை
மூடிவிட வேண்டும்

அடுத்தநாளில் பார்க்கவது
முழித்துச் சிரித்துக்கிடக்கும்
எடுத்ததனைப் பார்க்கவங்கு
பல்லுவிட்டுத் தெரியும்
பழுத்தமுளை வந்திடாது
பரவிவிட முளையைப்
பருவமான சூட்டோடு
விரித்து மூடிவிடுவார்

அடுத்தநாளில் விதைப்பதற்கு
அள்ளிமுளையை எடுத்து
கரத்தையிலே கொண்டுசெல்வோம்
கால்விட்ட முளையை
முளையெறிவார் மூத்தப்பா
முன் பின்னாய் நடந்து - பின்
முக்காலி வைத்திருப்பார்
முழுத்தண்ணியும் ஓட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூக் கவிதை வரிசையில் இவரது கவிதைகள் "கிராமியக்கவிதை" என எழுந்து புதிய தடத்தைப் பதிக்கிறது. மட்டக்களப்பிலிருந்து ஒரு நவீன கிராமியக் கவிஞர் தோற்றம் பெற்றதை உலகத் தமிழர்களாகிய நாங்கள் மகிழ்ந்து வரவேற்கின்றோம். இலங்கையின் புதிய இலக்கிய இயங்கியலில் "நீலையூர்சுதா" கிராமியக் கவிஞருள் முன்னவர் என்று கொண்டாடத்தக்க பண்புடன் முகிழ்ந்து மணம் பரப்புகின்றார்.

- கல்லாறு சதீஷ் (சுவிஸ்)

நீலையூர் பெற்றெடுத்த நீல மேகமே, நட்புக்கு இலக்கணமாய் திகழ்பவனே, குண்டசாலையில் விவசாய டிப்ளோமா பயின்ற வேளை வில்லுப்பாட்டிலும் நாடகக்கலையிலும் உனது நகைச்சுவையையும் கலை ஆர்வத்தையும் கண்டு களித்தோம். தற்போது உலகம் போற்றும் கவி வேந்தனாக நீ வலம் வரும்போது என் நெஞ்சம் நெகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

இ. நகுலேஸ்வரன்
(அவுஸ்திரேலியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிஞர் “நீலையூர் சுதா”வின் கிடுகு வீட்டினுள்ளே...

“கவிதை உலகம் கெஞ்சும் - உந்தன்
கவிதை கேட்டால் நெஞ்சம் கொஞ்சும்”

“பைந்தமிழ்ச்சுடர்” கவிஞர் நீலையூர் சுதாகரனின் புதுக்கவிதைகளில் நடைமுறை உலகின் யதார்த்தங்களும் தமிழர் தம் வாழ்க்கையின் தனித்துவமும் கிராமிய வாழ்வியலின் பண்பாடும், பழக்கவழக்கமும், பாரம்பரியமும், மண்வாசனையும், கருத்தாழமும் கவிதைப்பிரியர்களின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும்.

கவிஞர் சுதாகரனின் கவிதைகளில் செந்தமிழின் வாசம் செறிந்து மணம் வீசும். தென்றல் காற்றின் இதம் இனிமையூட்டும். நகைச்சுவையும் நளினமாகும். நங்கையரை நல்கும் கவிதை நயம் தரும். அலைபாயும் கடலினிலே அழகான கவிதை திரை மோதும்.

பெரிய நீலாவணை பெற்றெடுத்த பெருமகன் பெருமைமிகு கவிகளுக்குச் சொந்தக்காரன் சிறுவயதுக் கவிதையெல்லாம் காகித ஓடமாய் ஓடாமல் ஒழிந்தது தான். அதிலே மிஞ்சிய கவிதைகளும் “கிடுகு வீடு” கவித் தொகுப்பானதுதான். நூற்றுக்கும் மேலான கவிதைகள் நன்னிலத்தில் நாற்றாக நடப்பட்டதுதான். நாமகளும் நாவினிலே நல்லருள் பாலித்ததுதான்.

முகப்புத்தகத்திலே முறைதவறாமல் தினந்தோறும் கவிதை வரும். அது ஆதவனின் அழகான ஒளிதரும். விஞ்ஞானத்துறை பட்டம் பெற்றவர்தான். பல பதவிகளையும் பார்த்தவர்தான். கிழக்கினிலே மீன்பிடித்துறைப் பணிப்பாளராய் பணி புரிகின்றார். வாக்கினிலே வரும் வளமான தமிழுக்குப் பஞ்சமில்லை தான். வரகவி யென்று கூறுவதில் வஞ்சகமில்லைதான். “பைந்தமிழ்ச்சுடர்” கவிஞரின் தமிழ் வளம் சேர்ந்த கவிவளம் மென்மேலும் பெருக வேண்டுமென வேண்டி என் மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

- கலைமாறன் செ.லோகராஜா
(Tamil SP TR-1, BA, Dip.in Education) (SL-PS class - I, SLEAS)
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர்

ISBN: 978-624-5849-31-4
மகுடம்
750.00
Design & Print : Wanasinghe Printers, Batticaloa. 065-2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org